விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆு பங்குனி மீ 02-ம் உ | வியாழக்கிழமை | (15 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 17 | ஓசை 25

## கப்பலில் போனவர்கள் அரசின் நிஸான் வாகனங்களுடனும்........!

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் வடக்கு மாகாணத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும் இந்திய இராணுவம் நேற்று முன்தினம் காங்கேசன் துறை முகத்திலிருந்து வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான இலங்கை அரசு வழங்கிய மூன்று நிஸான் வாகனங்களையும் கப்பலில் ஏற்றிக்கொண்டு சென்றதாக அவ் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தில் மட்டும் பல திருகோணமலையிலிருந்தும் சில வாகனங்கள் மாயமாக மறைந்து வருவதாகவும் செய்திகள் வெளிவந்தன.

பொது நூலகம் 1993-07- பகுதி யாழ்ப்பாணம்

# பெங்களூர் நந்திமலை பங்களாவில் பெருமாள்!

## ஒரிஸாவில் பத்மநாபா!

### தமிழ் நாட்டுக்குத் தப்பிவராமல் தடுக்க பொலிசார் அங்கு கடமையில்!

(பெங்களூர்)

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் நந்திமலைஎன்ற உல்லாசப் புரியில் வசதியான பங்களாவில் கடுமையான பாதுகாப்புடன் வாழ்க்கையைத் தொடங்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதே சமயம் திரு. பெருமாளின் ஈ. பி. ஆர். எல். எவ். பொதுச்செயலாளர் திரு. பத்மநாபா கிழக்கு இந்தியாவில் ஒரிஸாமாநிலத்தில் கோரக்பூர் நகரில் கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் கூடாரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வரதராஜப் பெருமாள் எங்கே இருக்கிறார் என்ற



கேள்வி எழுந்த போதிலும் இந்திய அரசு இன்னமும் பெருமாள் இந்தியாவிலிருப்பதாக ஏற்றுக்கொள்ளவில்லை பெருமாள் எங்கேஇருக்கிறார் என்று இன்னமும் இலங்கை அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் திரு. வரதராஜப் பெருமாள் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பங்களூரில் உல்லாச புரியான நந்தி



## வங்கிகளுக்கு பென்சன் வவுச்சர்கள்

(கொழும்புத்துறை)

இம்மாத ஓய்வூதியப் பணத்திற்குரிய வவுச்சர்கள் யாழ். செயலகத்தினால் சகல வங்கிகளுக்கும் அனுப்பிவைக்கப் பட்டு விட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வார இறுதியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வங்கிகள் பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகயாழ். செயலக ஓய்வூதியக் கிளை அதிகாரி ஒருவர் எமது நிருபரிடம் தெரிவித்தார். (24)

மட்டக்களப்பு கல்வி அலுவலகத்தில்

## லிகிதர் செய்யும்சில வேலைகளை ஆசிரியர்கள் செய்யவேண்டும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தில் விழா முற்பணம், விசேட முற்பணம் போன்ற சம்பளத்திற்கு புறம்பான கொடுப்பனவுகள் பெறுவதென்றால் ஆசிரியர்களே அந்த வேலைகளைச் செய்ய வேண்டும்.

மேற்படி முற்பணங்கள் பெறுவதற்காக விண்ணப்பம் செய்யும் ஆசிரியர்கள் அவ் விண்ணப்பத்தை கடன் அட்டை பதிவு லிகிதரிடம் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டுமாம்.

ஆனால் லிகிதர்கள் செய்ய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மா களஞ்சியத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறியது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் மா சேகரித்து வைத்திருக்கும் களஞ்சியத்தில் இதுவரைகாலமும் இருந்துவந்த இந்திய இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது, களஞ்சியப் பொறுப்பாளர் அதன் பொறுப்பை மீண்டும் ஏற்றுள்ளார்.

பல தொன் மா அங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மேற்படி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அளவை உற்பத்தியாளர்கள்

## மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இரு எக்ஸ்றே கருவிகளும் பழுது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுவைத்திய சாலையிலுள்ள எக்ஸ்றே இயந்திரங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு பொது வைத்திய சாலையாக விளங்கும் இவ் வைத்தியசாலையின் எக்ஸ்றே இயந்திரங்கள் இரண்டும் பழுதடைந்து பல மாதங்களாகியும் திருத்தப்படவில்லை.

இரு இயந்திரங்களில் ஒரு இயந்திரம் இருபத்தேழு வருடங்கள் பழமை வாய்ந்தது. பழுதடைந்து ஐந்து வருடங்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில்கள் தாமதமாக ஓடியதால் 6 அதிகாரிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

சில தினங்களாக ரயில்கள் தாமதமாக சேவையாற்றியது தொடர்பாக ஆறு ரயில்வே உயர் அதிகாரிகளின் தற்காலிக வேலை நீக்கம் செய்யப் பட்டுள்ளன.

இவர்கள் கவலையீனமாக நடந்துள்ளதாகவும் பழுதான ரயில் என்ஜின்களை சேவையில் ஈடுபடச் செய்து இடைவழியில் ரயில்கள் நின்றதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏனைய ரயில்களும் தாமதமாக சேவையிலீடுபட வேண்டிவந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

## யூ. என். பி. யும், புலிகளும் கூட்டம் நடத்தலாமா?

- சிறிமா.

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதியே பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்மறுடுள்ளது. விரைவில் நிலைமை சீராகும்பின்னர் எல்லோருமே பொதுக்கூட்டங்கள் நடத்தலாம் என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜயரத்தினா நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆளும்கட்சியினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நாட்டில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதியளிக்கபபடுகிறது ஆனால் எதிர்க் கட்சிகளுக்கு இந்த உரிமை மறுக்கப்படுகிறது என்று எதிர்கட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகளில் சிற்றூழியர் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள பல பாடசாலைகளில் சிற்றூழியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் சில பாடசாலைகளில் இவர்கள் இல்லாது ஆசிரியர்களும், மாணவர்க

(6ஆம் பக்கம் பார்க்க)

போன்ற சம்பளத்திற்கு புறம்பான கொடுப்பனவுகள் பெறுவதென்றால் ஆசிரியர்களே அந்த வேலைகளைச் செய்ய வேண்டும்.

அட்டை பதிவு லிகிதரிடம் கொடுத்து பதிவு செய்து கொள்ள வேண்டுமாம்.

ஆனால் லிகிதர்கள் செய்ய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மா களஞ்சியத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறியது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் மா சேகரித்து வைத்திருக்கும் களஞ்சியத்தில் இதுவரைகாலமும் இருந்துவந்த இந்திய இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தற்போது, களஞ்சியப் பொறுப்பாளர் அதன் பொறுப்பை மீண்டும் ஏற்றுள்ளார்.

பல தொன் மா அங்கு சேசரித்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் மேற்படி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அளவை உற்பத்தியாளர்கள் அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

திரவ அளவைகளை உற்பத்தி செய்பவர்கள் அதற்கான அனுமதிப்பத்திரத்தை பெறவேண்டும் என்று நிறுவை-அளவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

திரவ அளவைக் கரண்டிகளை உபயோகிக்கும் கடைக்காரர் முத்திரையிடப் பட்டதன்பின்பே அவைகளை பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்த அவர், திரவப் பொருட்களை கொள்வனவு செய்யும் மக்கள், மேற்படி அளவைக் கரண்டிகள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்துக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (தி)

## பன்னிரெண்டுபேர் கொலை தொடர்பாக பொலிஸார் கைது!

(கொழும்பு)

சில தினங்களுக்கு முன்பு பவுல்கெலவில் இடம்பெற்ற பன்னிரண்டு பேரின் கொலை தொடர்பாக ஐந்து றிசேவ் பொலிஸார் இரகசிய பொலிஸாரால் கைது செய்யடபட்டுள்ளனர்.

இந்த றிசேவ் பொலிஸார் ஜாஎல, நித்தம்புவ, கிரிபிதிங்வம, புலத்பிட்டிய ஆகிய இடங்களில் இடம்பெற்ற கொள்ளைகளிலும் தொடர்பு கொண்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

பன்னிரெண்டுபேரின் கொலைகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் விசேட அதிரடிப்படையினர் சிலரையும் இவர்கள் உதவிக்கு கொண்டு சென்றதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

### புலமைப்பரிசில்

(கொழும்பு)

யப்பான், சோவியத் யூனியன், பல்கேரியா, செக்கோஸ்சிலாவாக்கியா, யூகோஸ்சிலாவாக்கியா ஆகிய நாடுகளில் பட்டப்படிப்பைமேற்கொள்ள புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான விண்ணப்பங்களை இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

### குவைத்தில் வேலைவாய்ப்பு என

## 40 லட்சம் ரூபா மோசடி போலி ஏஜன்ஸி கைதானார்

(கொழும்பு)

குவைத்தில் வேலை பெற்றுத்தருவதாக கூறி பலரிடம் நாற்பது லட்சம் ரூபா பெற்று ஏமாற்றிய ஏஜன்ஸி ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாலாயிரம் ரூபா வீதம் சுமார் ஆயிரம் பேரிடம் முற்பணமாக இவர் பெற்றாராம்.

இந்த ஏஜன்ஸி நிலையம் முற்றுகையிடப்பட்டு பல ஆவணங்களும் பாஸ்போட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

---

சர் அ. வரதராஜப் பெருமாள் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் நந்திமலைஎன்ற உல்லாசப் புரியில் வசதியான பங்களாவில் கடுமையான பாதுகாப்புடன் வாழ்க்கையைத் தொடங்கியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதே சமயம் திரு. பெருமாளின் ஈ. பி. ஆர். எல். எவ். பொதுச்செயலாளர் திரு. பத்மநாபா கிழக்கு இந்தியாவில் ஒரிஸாமாநிலத்தில் கோரக்பூர் நகரில் கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் கூடாரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வரதராஜப் பெருமாள் எங்கே இருக்கிறார் என்ற



கேள்வி எழுந்த போதிலும் இந்திய அரசு இன்னமும் பெருமாள் இந்தியாவிலிருப்பதாக ஏற்றுக்கொள்ளவில்லை பெருமாள் எங்கேஇருக்கிறார் என்று இன்னமும் இலங்கை அரசுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனால் திரு. வரதராஜப் பெருமாள் கர்நாடக மாநிலத்தின் தலைநகரான பங்களூரில் உல்லாச புரியான நந்திமலையிலுள்ள பங்களாவில் குடியமர்ந்துள்ளதாகத் தமிழ் நாட்டிலுள்ள செய்திப் பத்தி

(6 ம் பக்கம் பார்க்க)



## போனவர்கள் வைத்துப்போன தொலைபேசிக் கட்டணம் $4\frac{1}{2}$லட்சம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த காலங்களில் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல்.எப், ரெலோ குழுக்களால் பாவிக்கப்பட்ட அரச, தனியார் தொலைபேசி கட்டனங்கள் ரூபா 4 இலட்சத்து 34 ஆயிரம் ஆகும் என பிராந்திய தொலைத் தொடர்பு பொறியியலாளர் திரு பி. இராஜஸ்வரன் தெரிவித்தார்.

ரெலோ இயக்கம் ஆரையம்பதி ப நோ. கூ. சங்கம் (ரூபா 42,000) சம்மாந்துறை மிருக வைத்திய அதிகாரி அலுவலகம் (ரூபா 25.000) திருக்கோவில் கி. ச அலுவலகம் (ரூபா 70,000) உட்பட 9 தொலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய இராணுவத்தால் எமக்கு 8கோடி 50லட்சம் நட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இந்திய இராணுவம் எமது பேரூந்துகளை சேதப்படுத்தி உள்ளது. இதில் எமக்கு எட்டுக் கோடியே ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான நட்டம் ஏற்பட்டுள்ளது. இது தவிர எமது டிப்போ கட்டிடங்கள் பேரூந்து நிலையங்கள் என்பவற்றால் ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த வடபிராந்திய போக்குவரத்து சேவையை கொண்டு நடத்த வேண்டிய நிலையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### தொண்டராசிரியர் விண்ணப்ப முடிவு நாளை

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்கள், வசதிக்கட்டண ஆசிரியர்களை நிரந்தர நியமனயாக்குவதற்கான விண்ணப் பங்களை அனுப்பும் இறுதி நாள் நாளை 16 ஆம் திகதியாகும்.

31.12 1989 வரை ஒருவருட சேவையை பூர்த்தி செய்த 18-35 வயதுடைய ஆசிரியர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

## யூ. என். பி. யும், புலிகளும் கூட்டம் நடத்தலாமா?

- சிறிமா.

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புக் கருதியே பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்மறுடுள்ளது. விரைவில் நிலைமை சீராகும்பின்னர் எல்லோருமே பொதுக்கூட்டங்கள் நடத்தலாம் என்று பாதுசாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜயரத்தினா நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆளும்கட்சியினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நாட்டில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு அனுமதியளிக்கபபடுகிறது ஆனால் எதிர்க் கட்சிகளுக்கு இந்த உரிமை மறுக்கப்படுகிறது என்று எதிர்கட்

(6ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகளில் சிற்றூழியர் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உள்ள பல பாடசாலைகளில் சிற்றூழியர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் சில பாடசாலைகளில் இவர்கள் இல்லாது ஆசிரியர்களும், மாணவர்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி ஆசிரியர்களுக்கு 20ஆம் திகதி நியமனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நாலாயிரம் பயிற்சி ஆசிரியர்களுக்கு இம்மாதம் இருபதாம் திகதி நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவின் பணிப்புரையின்படி இந்த நியமனம் உடனடியாக நடைபெறவுள்ளதாக கல்விச் சேவையின் ஆணைக் குழுத் தலைவர் ருதி ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இந்த நிய

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை உறுப்பினர்கள் தொலைபேசி துண்டிப்பு!

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட உறுப்பினர்கள் இருபத்தாறு பேருக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புகள் கட்டணம் செலுத்தப்படாத நிலையில் துண்டிக்கபபட்டுள்ளது,

தபால் தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சின் பணிப்புரையின்படி கட்டணம் செலுத்த்ப்படாத நிலையில் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளதாக பிராந்திய தொலைத்தொடர்பு பணிப்பாளர் திரு. பி. இராஜேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மேற்படி மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாகாண சபை செயலாளரின் வேண்டுகோளின்படி தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் இணைப்பு வழங்கப்

(6 ம் பக்கம் பார்க்க)

## "ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தன்னிஷ்ட ஈழப் பிரகடனத்தை எதிர்க்கிறோம்"

### ஈரோஸ் பாலகுமார் கருத்து

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ். இந்தியாவிற்கு இடம் பெயரும் போது தமது பெட்டி படுக்கைகளுடன் மாத்திரம் போகவில்லை. சில கோரிக்கைகளையும் வைத்துப் போயுள்ளனர். ஈ. பி. ஆர். எல். எவ். பின் சில தீர்மானங்களை நாம் எதிர்க்வில்லை. ஆனால் அவர்கள் தன்னிஷ்டமாகஈழப் பிரகடனம் செய்ததை நாம் எதிர்க்கின்றோம் என ஐலண்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் ஈழவர் ஜனநாயக முன்னணிச் செயலாளர் நாயகம் பாலகுமார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் ஈ. பி. ஆர். எல். எவ். அப்படிச் செய்ததற்கும் சில தார்ப்பரியங்கள் உண்டு. இந்திய அரசு அவர்களுக்கென ஒரு அந்தஸ்தை வழங்கியுள்ளது. ஈ. பி. ஆர். எல். எவ்.க்கும் காங்கிரஸ் (I) க்கும் சில உடன்பாடுகள் ஏற்கனவே உண்டு. எமது அரசியல் இந்திய அரசியலுடன் கலப்பதை நாம் ஆதரிக்கவில்லை. ஆனால், தன்னிச்

(6-ஆம் பக்கம் பார்க்க)

**வரிவிளம்பரம்**

**விற்பனைக்கு**

### குடும்ப நாவல்

மீரா வெளியீடு கே. எஸ். ஆனந்தன் எழுதிய ''பூஜைக்காக வாழும்பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் பூவை ஒருத்தியின் புனித வாழ்வைச் சித்தரிக்கும் குடும்ப நாவல் ராஜன் புத்தக சாலை, ஸ்ரீ காந்புத்தக சாலை பஸ்நிலையம், யாழ்ப்பாணம். B/130

அப்பளம் தயாரிப்பாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட ' உழுந்து மா, கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M.G.M., No·777 K.K.S Rd, Jaffna.

கருவாட்டுக்கு உகந்த அரைத்த உப்பு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M
No. 777, K. K. S. Road,
JAFFNA.

### சேவை

RAJ⁷ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)


## வலி. மேற்கு மக்களின் தேவை

(சுதுமலை)

தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்த வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த அலுவலகம் அமைப்பதற்குப் புனர்வாழ்வு

## போட்டி முடிவுகள்

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

இமையாளன் விளையாட்டுக்கழகம் 81 (முதலாம் இடம்) துன்னாலை ஐக்கிய விளைட்டுக் கழகம் 73 (இரண்டாம் இடம்) நெல்லியடி விளையாட்டுக் கழகம் 61 (மூன்றாம் இடம்) (18)

# வடமராட்சிப் பாடசாலைகளில் அனுமதி பற்றிய அதிருப்தி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரிகளின் இவ்வாண்டிற்கான 6ஆம் ஆண்டு மாணவர்கள் அனுமதிபற்றி வடமராட்சிப் பகுதி பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இதனையடுத்து கல்வி, கலாசார, தகவல்துறை அமைச்சின் செயலாளர் கேணல் வீ. எஸ். குடலிகம இக்கல்லூரிகளின் அதிபர்கள் சுற்றுநிருப ஒழுங்கை மீறி ஒழுங்கற்ற முறையில் அனுமதிகள் மேற்கொள்வார்களானால் அதிபர்களுக்கு எதிராக கீழ்ப்படிவின்மை குற்றத்திற்காக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அறிவித்துள்ளது

இவ்விரு கல்லூரிகளிலும் ஆரம்பகாலம் தொடக்கம் 6ஆம் ஆண்டிற்கான அனுமதிகள் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் தவிர மிகுதி மாணவர்கள் அனுமதிப் பரீட்சை மூலம் எந்தப் பகுதியிலிருந்தாவது தெரிவு செய்யப்பட்டு ஒழுங்காக அனுமதிக்கப்பட்டு வந்தனர்.

ஆனால் இம்முறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு யாழ். கல்வித்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட அனுமதிக்கான முறையில் புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள் தவிர ஏனைய பருத்தித்துறை புலோலிப் பகுதி மாணவர்கள் மட்டுமே இவ் அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என கல்வித் திணைக்களம் கண்டிப்பாக அறிவித்தது.

உடுத்துறை நாகர்கோவில், கரவெட்டி, உடுப்பிட்டி. வல்வெட்டித்துறை, நெல்லியடி (பருத்தித்துறை, புலோலி தவிர்ந்த) கொத்தணிப் பகுதிகளில் உள்ள பெற்றோர்கள் வடமராட்சிப் பகுதியின் பிரபல கல்லூரிகளான இக்கல்லூரிகளில் தமது மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டமையால் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர்.


பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் (வ/து)

# விளம்பரங்கள்

**பதவி வெற்றிடங்கள்:**

(1) வங்கிச் சேவைகள் முகாமையாளர் 118:8
(2) உப களஞ்சியப் பொறுப்பாளர் பதில் 208:14
(3) லொறிப் பாதுகாவலர்
(4) களஞ்சியத் தொழிலாளி
(5) கிளை முகாமையாளர் : அமையம்

மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இப் பதவிகளுக்கான வயதெல்லை 18 முதல் 45 வயது வரை (சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.) மேலும் கல்வித் தகமைகள், வேதனம் பற்றிய விபரங்களை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு அதன் பிரகாரம் உங்கள் விண்ணப்பங்களை கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடத் தகமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''தலைவர், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 1990. 03. 27ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். மேலும், நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் என்ன பதவிக்கு விண்ணப்பிக்கின்றீர்களோ அப் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பருத்தித்துறை
1990. 03. 13

பொது முகாமையாளர்

**பருத்தித்துறை மக்கள் சந்தையில் 15-03-90 கூட்டுறவு மக்கள் கடை திறப்பு விழா**

இன்று மக்கள் கடை திறக்கப்படுகிறதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விரைவில்

வல்வெட்டித்துறையில்

கூட்டுறவு மக்கள் கடை,
இரும்பு விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ளன
என்பதை


# எழுவைதீவு மக்களின் கடற்பயணம் கரையிறங்க முடியாது அவதி

## அலையரசி படகு கரையில் தரிக்கமுடியாது

(தீவுப்பகுதி)

எழுவைதீவு துறையில் அரச படகான அலையரசி தரிக்க முடியாதுள்ளதனால் பிரயாணிகள் அலையரசியிலிருந்து தனியார் படகுகள் மூலமே கரைக்கு போய்ச்சேர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

முன்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலையரசி போன்ற பெரிய படகுகளிலிருந்து மக்களை கரைக்கு கொண்டு வந்து சேர்ப்பதற்காக இணைப்பு படகுச்சேவையொன்றை நடாத்தி வந்தது.

தற்போது அப்படகு சேவை நிறுத்தப்பட்டுள்ளதனால் மக்களை கரைசேர்ப்பதற்கு தனியார் படகுகளே பயன்படுத்தப்படுகின்றது. இதனால் இப்பகுதிக்கு செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.

எழுவைதீவு பாலவேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதனால் பெரிய படகுகள் எழுவைதீவு கரைக்கு வர முடியாத நிலை உள்ளது. இத்துறைமுக பாலவேலையை பூர்த்தி செய்ய இதுவரை யாரும் முன்வரவில்லையென வும் அரசு தங்களை ஒதுக்கி புறக்கணித்து விட்டதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (15)

## கால் நடைகள் தொற்று நோயினால் பாதிப்பு

(தீவுப்பகுதி)

நெடுந்தீவுப் பகுதியில் ஏராளமான கால்நடைகள் இருப்பதாகவும் அவற்றிற்கான தொற்றுநோய்த் தடுப்பூசிகள், மருந்துகள் வழங்க இதுவரை யாரும் முன்வரவில்லையெனவும் இப்பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றார்கள்.

நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்கப்படாத ஆடு, மாடுகள் போன்ற கால்நடைகள் நெடுந்தீவிலிருந்து பெருந்தொகையாக வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் இவற்றின்மூலம் நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் ஆடு, மாடுகள் தன்னிச்சையாகத் திரிவதாகவும் இவற்றிலிருந்து நெடுந்தீவு மக்கள் அதிகளவு பயன் பெறுவது குறைவென்றும், இவற்றை நல்ல முறையில் பேணிப்பாதுகாக்கவும், நெடுந்தீவு மக்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கவும் யாரும் முன்வரவில்லையென வும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (15)

## நெடுந்தீவில் குடிநீரில் கறள்

(தீவுப்பகுதி)

நெடுந்தீவில் குடிநீர் வழங்கும் குழாய்கள் துருப்பிடித்திருப்பதால் அதிலிருந்துவரும் நீர் துருப்பிடித்த கலப்புடன் வருவதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து பலதடவைகள் அதிகாரிகளுக்கு புகார் செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லையாம்.

உடனடியாக திருத்தப்படாவிட்டால் இந்த நீரைக்குடிப்பவர்கள் நோய்க்குள்ளாவார்கள் என சுகாதாரப் பகுதி எச்சரிக்கை செய்துள்ளது.

## போதை வஸ்து பாவிப்போர் தினம்40 பேர்குற்றவாளிகள்

(கொழும்பு)

நாட்டில்போதைப்பொருள் பாவிப்பு தொடர்பாக தினசரி நாற்பது பேர் குற்றவாளிகளாக மாறுவதை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் தொண்ணூறு சதவீதமானோர் இளைஞர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே வேளை இவர்களுடைய ஒரு கடத்தல் இடமாக வைத்து போதைப்பொருள் கடத்துவோர் இலங்கையூடாக ஏனைய இடங்களுக்கு கடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தீவுப்பகுதிகளுக்கு விஜயம்

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்கும்பான், மண்டைதீவு, ஆகிய பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பு வேலைகளைச் கவனிப்பதற்காகவும் இப்பகுதி மக்களின் குறை நிறைகளை அறிவதற்காகவும் தீவுப்பகுதி பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் தீவக அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ ஆகியோர் சென்றிருந்தனர். (15)

## வவுனியா மாவட்டத்துக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(வவுனியா)

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் வவுனியா மாவட்டத்துக்கு பதினைந்துலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் விவசாய பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூடம் கட்ட ஆறு லட்சம் ரூபாவும் பூவரசன்குளம் மகா வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டடம் கட்ட ஐந்து லட்சம் ரூபாவும் செலவிடப்படும்.

இதேபோல நம்பைக்குளம் மகாவித்தியாலயத்திற்கு பதினையாயிரம் ரூபாவும் புதுக்குளம் பாடசாலைக்கு இருபத்தையாயிரம் ரூபாவும் செலவிடப்படும்.

## சம்பள உயர்வு கோரிக்கை

## யாழ் நகரில் இன்றைய சினிமா


80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது

றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## வலி. மேற்கு மக்களின் தேவை

(சுதுமலை)

தனியார் கட்டிடத்தில் இயங்கி வந்த வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த அலுவலகம் அமைப்பதற்குப் புனர்வாழ்வு அமைச்சு தேவையான நிதி ஒதுக்கியும், எந்தவொரு ஒப்பந்தக்காரரும் இந்த வேலையைப் பொறுப்பேற்றுச் செய்ய முன்வராததால் வலி-மேற்கு பொதுமக்கள் பெரும் விசனமடைந்துள்ளார்கள். தற்போது மிகவும் வசதி குறைந்த இடத்தில் இருக்கும் இக்காரியாலயத்தில் பலவித இன்னல்களுக்கு மத்தியிலேயே ஊழியர்கள் கடமையாற்றுகின்றார்கள். (19)

## வெள்ள அகதிகளுக்கு பாகிஸ்தான் அரிசி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்கென 100 மெற்றிக் தொன் பாகிஸ்தான் அரிசி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு 10 கிலோ அரிசி வீதம் வழங்கப்படும் எனவும், 20 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த அரிசி வழங்கப்படும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (37)

## கிராம சேவையாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பணிபுரிந்த நானூற்றி முப்பத்தைந்து கிராம சேவையாளர்களுக்கு இடமாற்றம் கிடைத்திருக்கிறது.

இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற்றவர்கள் நாளை பதினைந்தாம் திகதி புதிய பிரிவுகளுக்கான பொறுப்புகளை ஏற்றுக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)


பும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் என்ன பதவிக்கு விண்ணப்பிக்கின்றீர்களோ அப் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பருத்தித்துறை
1990. 03. 13

பொது முகாமையாளர்



**பருத்தித்துறை மக்கள் சந்தையில் 15-03-90 கூட்டுறவு மக்கள் கடை திறப்பு விழா**

இன்று மக்கள் கடை திறக்கப்படுகிறதென் பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

விரைவில்
வல்வெட்டித்துறையில்

கூட்டுறவு மக்கள் கடை,
இரும்பு விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ளன
என்பதை
மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகின்றோம்.

பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1990. 03. 13

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,

(B.266)



**NEW MASTER INSTITUTE**

B.M.C Lane, Jaffna.

நந்தகுமார்
மக்ஸி
பாபு
நாகநாதன்
ஐங்கரநேசன்
சந்திரமோகன்

ஆகிய எமது வழமையான
ஆசிரிய[illegible]ழுவினால்

90 A/[illegible] CLASS
பிரிவு - II
ஆரம்பம் - 19. 03. 90 திங்கள்
காலை - 8.00 மணி

(B/268)


## தீவுப்பகுதிகளுக்கு விஜயம்

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, மண்கும்பான், மண்டைதீவு, ஆகிய பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அமைப்பு வேலைகளைச் கவனிப்பதற்காகவும் இப்பகுதி மக்களின் குறை நிறைகளை அறிவதற்காகவும் தீவுப்பகுதி பொறுப்பாளர் திரு. ஜேம்ஸ் தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் தீவக அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு. வீ. கஸ்ரோ ஆகியோர் சென்றிருந்தனர். (15)

## சம்பள உயர்வு கோரிக்கை

(கோண்டாவில்)

இப்பகுதியில் புகையிலை வெட்டும் வேலை ஆரம்பமாகி உள்ளது. கடந்த வருடத்தில் போன்றே இம்முறையும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு அறுபது ரூபாய் முதல் எழுபது ரூபாய் வரை வழங்கப்படுகின்றது.

அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுக்கு தற்பொழுது கொடுக்கப்படும் இந்தக் கூலி போதாது என்று தொழிலாளர்கள் அதிருப்திஅடைந்துள்ளதுடன் தமது நாளாந்தக் கூலியை உயர்த்தித் தருமாறு தோட்டச் சொந்தக்காரர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (34)

## சில்லாலையில் இரவு கொள்ளை

(பண்டத்தரிப்பு)

சில்லாலை வடக்கில் உள்ள ஒரு பகுதியில் சில வீடுகளில் இரவு நேரம் கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன.

இப்பகுதியில் உள்ள ஆறு மின்கம்பங்களில் உள்ள வீதி விளக்குகளை அணைத்து விட்டே இக்கொள்ளைகள் இடம் பெற்றனவாம். அத்துடன் இவ் வீடுகளின் மின்சாரமும் துண்டிக்கப்பட்டன.

அமைதி ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் இக்கொள்ளை நடைபெற்றது குறித்து மக்கள் பீதியடைந்துள்ளனர்.

## நாளை போட்டி

(பருத்தித்துறை)

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கிடையேயான மெய்வல்லுநா போட்டி 16 ஆம் திகதி வித்தியாலய விளையாட்டுமைதானத்தில் அதிபர். திரு. கே.வீணுகேபால் தலைமையில் நடைபெறும்

வீதமானோர் இளைஞர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள் ளுக்கு கடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா மாவட்டத்துக்கு 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(வவுனியா)

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் வவுனியா மாவட்டத்துக்கு பதினைந்துலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் விவசாய பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூடம் கட்ட ஆறு லட்சம் ரூபாவும் பூவரசன்குளம் மகா வித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டடம் கட்ட ஐந்து லட்சம் ரூபாவும் செலவிடப்படும்.

இதேபோல நம்பைக்குளம் மகாவித்தியாலயத்திற்கு பதினையாயிரம் ரூபாவும் புதுக்குளம் பாடசாலைக்கு இருபத்தையாயிரம் ரூபாவும் செலவிடப்படும்.


**அறிவித்தல்**

லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி இறுதி D.A.M பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பதாரர்கள் உடனடியாக கல்லூரி காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கௌரவ செயலாளர்
வட இலங்கை
சுதேச வைத்தியசபை

(B/131)



**New Master Institute**

B. M. C. Lane, JAFFNA.

90 A/L

CHEMISTRY
Mr. J. S. R. MAXI

MONDAY — To — FRIDAY

06-30 — 7-30 — அசேதன இரசாயனம்
10-00 — 11-00 — பௌதிக இரசாயனம்
04-00 — 05-00 — சேதன இரசாயனம்

ஆரம்பம்: 15 03-90 காலை 6 - 30 மணி

(B.269)


இது குறித்து பலதடவைகள் அதிகாரிகளுக்கு புகார் செய்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லையாம்.

உடனடியாக திருத்தப்படாவிட்டால் இந்த நீரைக்குடிப்பவர்கள் நோய்க்குள்ளாவார்கள் என சுகாதாரப் பகுதி எச்சரிக்கை செய்துள்ளது.

## யாழ் நகரில் இன்றைய சினிமா


80 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு தொடர்கதை**

# காஷ்மீர்ப் பிரச்சினையில் இந்திய அரசியல் கட்சிகளுக்கு இடையில் ஒற்றுமை

(புதுடெல்லி)

இந்தியாவின் மாநிலமான ஜம்முகாஷ்மீர் பிரச்சினைக்கு இந்திய அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து முடிவு காண முனைந்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒற்றுமையைப் புலப்படுத்தும் தனிச் சிறப்புமிக்க நடவடிக்கையாக செவ்வாய்க்கிழமை எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே குரலில் இந்தியாவின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க அரசியல் சித்தாந்த வேறுபாடுகளைமறந்து ஒன்றுபடுமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இவ்வேண்டுகோளானது செவ்வாயன்று நடைபெற்ற ஜம்மு காஷ்மீர் பற்றிய விவாதத்தின் போது நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்தில் இந்தியாவின் ஜனநாயக சமயசார்பற்ற அமைப்புச்கு உட்பட்ட அரசியல் நடவடிக்கையில் ஜம்மு காஷமீரில் தொடங்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கொண்ட உறுதிப்பாடு தீர்மானத்தில் பிரதிபலித்தது மேலும், இவ் உறுப்பினர்கள் ஜம்மு காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் தவறான வழியில் நடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் வன்முறையைக் கைவிட்டு தங்களது துன்பங்களை களைய அமைதிவழிகளை பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இச்சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை இந்திரா காங்கிரஸ் சார்பிலும் காஷ்மீர் விவகார அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டோ சார்பிலும் வசந்த பார்டே முன்மொழிந்தார்.

பிரதம மந்திரி வி. பி. சிங் பேசுகையில் பாகிஸ்தான் அடாவடித்தனமாக எதையும் செய்ய முனைந்தால் இந்தியா உடனே உறுதியான பதிலடி கொடுக்கும் என்று எச்சரித்தார். அடாவடித்தனமான செயலால் கஷ்டப்படப் போவது இந்தியா அல்ல பாகிஸ்தான் மட்டுமே என்பதை வலியுறுத்திப்பேசினார். மேலும் அவர் பேசுகையில், எமது ஒற்றுமையையும் சுதந்திரத்தையும் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமையும் மன உறுதியும் எமது நாட்டிற்கு இருக்கிறது என்று குறிப்பிட்டார். எதிர்க்கட்சித்தலைவர் ராஜீவ் காந்தி கூறிய ஒரு யோசனையை ஏற்று, தாம் மிக விரைவில் ஜம்மு காஷ்மீருக்கு சென்று நிலைமையை மதிப்பிடக்கூடும் என்றும் கூறினார்.

இவ் விவாதத்தின்போது காஷ்மீர் ஆளுநர் நிலைமையை சமாளிக்கும் முறையில் குறைபாடு உடையதாக இருக்கிறது என்று இந்திரா காங்கிரசும், தேசிய மகாநாட்டு கட்சியும் குறை கூறியது. பாரதீய ஜனதா கட்சி காஷ்மீர் பள்ளத்தாக்குப்பகுதியில்அரசியல் முன் முயற்சியை மேற்கொள்வதில் மிகுந்த கவனம் தேவை என்றும், பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு ஆதரவு கொடுத்து ஊடுருவல்காரர்களை அனுப்பும் வரை காஷ்மீரில் மேற்கொள்ளும் எந்தவொரு அரசியல் நடவடிக்கையும் எதிர்விளைவையே ஏற்படுத்தும் என்று எச்சரித்திருக்கிறது விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் முத்தி முகமது சயீர் ஒரு வாரத்துக்குள் காஷ்மீர் பற்றி அனைத்துக் கட்சிக் கூட்டம் அழைக்கப்படும் என்று அறிவித்தார்.

இதற்கிடையில் ஜம்மு காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகன் நேற்று ஜம்முவிற்குச் சென்று காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் தங்கியிருக்கும் பல முகாம்களைப் பார்வையிட்டார். அவர்களின் பிரச்சினைகளை தீர்க்க எல்லா உதவியும் அளிப்பதாக அவர் உறுதி அளித்தார்.

## ஐக்கிய அமெரிக்க உதவி குழு யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து ஐக்கிய அமெரிக்க உதவி வழங்கும் ஸ்தாபனத்திற்கு ஒரு குழு யாழ். வந்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களை பார்வையிடவும், யாழ் மாவட்டத்தில் உற்பத்தி ஊக்குவிப்புப் பணம் ரூபா நாலாயிரம் வழங்குவது சம்பந்தமாகவும், வழங்கிய பணத்தின் பயன்பாடுகள் பற்றி பேசவும் அறியவுமே இக்குழு வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இக்குழு யாழ். மாவட்டத்தில் பாதிப்படைந்த பலஇடங்களைப் பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(தி)

## முகாமைத்துவ நிர்வாகத்தில் அதிபர்களுக்குப் பயிற்சி

(காங்கேசன்துறை)

யாழ். கல்வி மாவட்டத்திலுள்ள தரம் ஏ, பி, சீ பாடசாலைகளின் அதிபர்களுக்கான முகாமைத்தவ, நிர்வாகப் பயிற்சி நெறி ஒன்றினை நடாத்த யாழ். கல்வித்திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இப்பயிற்சி நெறி வதிவிடப் பயிற்சி நெறியாக இருக்கு தலைவர்கள், பாடஇணைப்பாளர்கள், தர இணைப்பாளர்களுக்கும், பகுதித்தலைவர்களுக்கும் இப்பயிற்சிநெறியினை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல விபரங்களும் கோட்டக்கல்வி அலுவலகமூடாகத் திரட்டப்பட்டு வருகின்றது. கல்வி அதிகாரி

## இந்தியாவில் தங்க இவர்களுக்கு விஸாஇல்லை!

(புதுடில்லி)

மாலைதீவு பிரஜைகள் இனிமேல் இந்தியாவில் மூன்று மாதங்கள் தங்கியிருக்க வெளியுறவு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுக்கு விஸா தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிரனெட்டுடன் இளைஞர்

(கம்பஹா)

கம்பஹாவில் இரண்டு கிறனேட்டுகளைத் தன்வசம் வைத்திருந்த ஒருவரைப் பொலிசார் சுற்றி வளைத்துப் பிடிக்க முயற்சித்த சமயம், அவர் ஆற்றில் குதித்துத் தப்பிவிட்டதாகத் தெரியவருகிறது.

கம்பஹா பொலிசுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினைத் தொடர்ந்து பொலிசார் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டார்களாம். தப்பியோடியவர் மகேந்திரன் என்ற பெயருடையவர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு கிறனேட்டுகளை மாத்திரம் பொலிசாரால் கைப்பற்ற முடிந்ததாம்.


## பொதுக்கூட்டம்

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

(விசேட நிருபர்)

கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுனர் போட்டிகளில் பண்டாரவன்னியன் 369 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தையும், சங்கிலியன் 234 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், குளக்கோட்டன் 206 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் எல்லாளன் 177 புள்ளிகள் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

(21)



## இஸ்ரேலில் கூட்டணியின் ஆட்சி கவிழ்ந்தது

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் ஆளும் கூட்டணி கட்சியில் இருந்து தொழிகட்சித் தலைவர் பெரேஸை பிரதம மந்திரி சமீர் வெளியேற்றியுள்ளார். இவரின் இந்நடவடிக்கையை தொடர்ந்து தொழிற்கட்சி அமைச்சர்களும் தமது அமைச்சர் பதவிகளை ராஜினமாச் செய்துள்ளனர். இதனால் இஸ்ரேல் கூட்டணி ஆட்சி செவ்வாய் கலைந்தது. பலஸ்தீனியர்களோடு எதிர் காலத்தில் நடத்தப்பட இருக்கும் சமாதான பேச்சு வார்த்தையின் போது தொழிற் கட்சிக்கும் தமக்கும் இணக்கம்போ சமரசமோ ஏற்படப் போவதில்லை என்பதால் இந் நடவடிக்கை எடுத்ததாக பிரதமர் சமீர் குறிப்பிட்டார்.

அதேவேளை தொழிற் கட்சித் தலைவர் பேரஸ் இன்று அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் பிரேரணை ஒன்றை சமர்பித்து சமீர ஆட்சியை தாம் வீழ்த்தப் போலதாகவும் அதன் பின, சமாதானம் கூறும் புதிய கூட்டாட்சி ஒன்றை தாம் அமைப்பார் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் பலஸ்தீனியருடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்காவிடில் தொழிற் கட்சி கூட்டணி அரசில் இருந்து விலகி விடக்கூடும் என இஸ்ரேலிய பாதுகாப்புத்துறை அமைச்சர் 23-2 90 குறிப்பிட்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

## சோவியத் ஜனாதிபதிக்கு புதிய ஆட்சி முறை அதிகாரங்கள்

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதிக்கு புதிய ஆட்சிமுறை அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற தி. கொர்பர்சேவின் வேண்டுகோளை சோவியத் பாராளுமன்றம் அங்கீகரித்தது.

டாஸ் செய்தி ஸ்தாபன அறிக்கையின் பிரகாரம் 1200 பிரதிநிதிகள் இத் தீர்மானத்தை ஆசரித்து வாக்களித்தனர் என்றும், 133 பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்தனர் என்றும், 61 உறுப்பினர்கள் இவ்வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. வாக்களிப்பில் கலந்து கொள்ளாதவர் லித்வேனிய உறுப்பினர்கள் ஆகும்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ள தனித்துவமான அதிகாரத்தை உறுதிப்படுத்தி, சோவியத் அரசியல் பாதுகாப்பைப் பல வருடங்களாக இந்த ஷரத்துக்களை அகற்றுவது என்

மட்டக்களப்பு ஆஸ்பத்திரி சவச்சாலை

## குளிர்சாதனப் பெட்டிகள்

ஸ்தாபனத்திற்கு ஒரு குழு யாழ். வந்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களை பார்வையிடவும், யாழ் மாவட்டத்தில் உற்பத்தி ஊக்குவிப்புப் பணம் ரூபா நாலாயிரம் வழங்குவது சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டது.

இக்குழு யாழ். மாவட்டத்தில் பாதிப்படைந்த பலஇடங்களைப் பார்வையிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# முகாமைத்துவ நிர்வாகத்தில் அதிபர்களுக்குப் பயிற்சி

(காங்கேசன்துறை)

யாழ். கல்வி மாவட்டத்திலுள்ள தரம் ஏ, பி, சீ பாடசாலைகளின் அதிபர்களுக்கான முகாமைத்துவ, நிர்வாகப் பயிற்சி நெறி ஒன்றினை நடாத்த யாழ். கல்வித்திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இப்பயிற்சி நெறி வதிவிடப் பயிற்சி நெறியாக இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர்கள், உபஅதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், பாடஇணைப்பாளர்கள், தர இணைப்பாளர்களுக்கும், பகுதித்தலைவர்களுக்கும் இப்பயிற்சிநெறியினை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல விபரங்களும் கோட்டக்கல்வி அலுவலகமூடாகத் திரட்டப்பட்டு வருகின்றது. கல்வி அதிகாரி (முகாமைத்துவம்) அவர்கள் இதற்கான ஒழுங்குகளைமேற்கொண்டு வருகிறார். (41)

# வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாதிப்படைந்துள்ள வீதிகளை புனரமைப்பது சம்பந்தமாக பெருந்தெருக்கள் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலர் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டுடன்பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல வீதிகள் மிக மோசமான நிலையில் பாதிப்படைந்திருப்பதும், இவற்றில் சில வீதிகள் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

இன்னும் சில வாரங்களுக்குள் முக்கியமான வீதிகள் சில திருத்தும் வேலைகள் முடிவடைந்து விடுமென அறியப்படுகிறது. (தி)

# யாழ். கோட்டக்கல்விப் பிரிவு மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கோட்டக் கல்விப்பிரிவு மெய்வல்லுனர் போட்டிகள் இம்மாதம் 19ஆம் 20ஆம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

இப்போட்டிகளுக்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், வட்டார பதினைந்து கொத்தணிகளிலும் உள்ள தேசிய மற்றும் தனியார் பாடசாலை போட்டிகளில் முதலிடம் பெற்ற வீரர் வீராங்கனைகள் பங்குபற்றுவர் என கோட்ட கல்வி பிரிவுகள் அதிகாரி தெரிவித்தார். (லோ)

# போலிச் சான்றிதழ்கள் தயாரித்த அச்சகம் முற்றுகை

(கொழும்பு)

கிரிபத்கொடப் பொலிஸார் கள்ளச் சான்றிதழ்களை அச்சிட்டு விநியோகிக்கும் அச்சுக்கூடம் ஒன்றைப் பிடித்துள்ளனர்.

போலிச் சான்றிதழ்களைத் தயாரிக்கும் இந்தத் தொழிலில், இந்த அச்சுக்கூடம் நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்துள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கல்வித் தகமைச் சான்றிதழ்கள், மாணவர்முன்னேற்ற அறிக்கைகள், மோட்டார் கார் லைசன்ஸ் மேல் உறைகள், பிறப்புச்சான்றிதழ்கள், றப்பர் ஸ்ராம்புகள் போன்றவற்றை இந்த அச்சுக்கூடம் தயாரித்து வந்ததாகத் தெரியவருகிறது.

(கம்பஹா)

கம்பஹாவில் இரண்டு கிறனேட்டுகளைத் தன்வசம் வைத்திருந்த ஒருவரைப் பொலிசார் சுற்றி வளைத்துப் பிடிக்க முயற்சித்த சமயம், அவர் ஆற்றில் குதித்துத் தப்பி விட்டதாகத் தெரியவருகிறது.

கம்பஹா பொலிசுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினைத் தொடர்ந்து பொலிசார் மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டார்களாம். தப்பியோடியவர் மகேந்திரன் என்ற பெயருடையவர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரண்டு கிறனேட்டுகளை மாத்திரம் பொலிசாரால் கைப்பற்ற முடிந்ததாம்.

# பொதுக்கூட்டம்

(ஏழாலை)

யாழ்ப்பாணம் ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் பொன்விழா - பகுதி 2 சம்பந்தமான பகிரங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15.05-90 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு மேற்படி வித்தியாலய மண்டபத்தில் ஏழாலை கொத்தணி உதவி அதிபர் திரு. வீ த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

# பரிசளிப்பு விழா

(சித்தங்கேணி)

மானிப்பாய் சென்ற ஆன்ஸ் தாபகர் தினப் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை முற்.பகல் திருமதி ஆர். இருதயநாதன் தலைமையில் நடைபெறும்.

# அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சார்ள்ஸின் (விக்னேஸ்வரா ஐங்கரன்) கவிதைநூல்கள் அறிமுகவிழா எதிர் வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். டிவகலாலா தலைமையில் நடைபெறும்.

# ஹமீத்-ரெலோ சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தூதுக்குழுவொன்று நேற்று முன்தினம் உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத்தை சந்தித்து பேசினர்.

திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையிலான இக்குழுவில், திரு. ஜி. கருணாகரன் எம் பி. ஆர். இளங்கோ டீ கிறிஸ்ரி ஆகியோர் இடம்பெற்றனர்.

### வருடாந்த

# விளையாட்டுப் போட்டி

(விசேட நிருபர்)

கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் பெரியபுலம் மகா வித்தியாலய வருடாந்த இல்லங்களுக்கு இடையேயான மெய்வல்லுனர் போட்டிகளில் பண்டாரவன்னியன் 369 புள்ளிகள் பெற்று முதலாம் இடத்தையும், சங்கிலியன் 234 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், குளக்கோட்டன் 206 புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் எல்லாளன் 177 புள்ளிகள் பெற்று நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (21)

# ஜனசக்தி திட்டம் மின்சாரக்கடன்

(கொழும்பு)

ஜனசக்தி பெறுவோருக்கு குறைந்த கடன் அடிப்படையில் மின்சாரம் வழங்க மின்சாரசபை புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இதற்கான கட்டணை இலங்கை மின்சாரசபை வழங்குவதோடு ஐந்து வருடத்தில் அதனை அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமிய மின்சாரம் வழங்கும் திட்டத்தில் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

# சோவியத் ஜனாதிபதிக்கு புதிய ஆட்சி முறை அதிகாரங்கள்

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதிக்கு புதிய ஆட்சிமுறை அதிகாரங்களை வழங்கவேண்டும் என்ற திரு. கொர்பர்சேவின் வேண்டுகோளை சோவியத் பாராளுமன்றம் அங்கீகரித்தது.

டாஸ் செய்தி ஸ்தாபன அறிக்கையின் பிரகாரம் 1200 பிரதிநிதிகள் இத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தனர் என்றும், 133 பிரதிநிதிகள் எதிர்த்து வாக்களித்தனர் என்றும், 61 உறுப்பினர்கள் இவ்வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. வாக்களிப்பில் கலந்து கொள்ளாதவர் லித்வேனிய உறுப்பினர்கள் ஆகும்.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ள தனித்துவமான அதிகாரத்தை உறுதிப்படுத்தி, சோவியத் அரசியல் பாதுகாப்பைப் பல வருடங்களாக இருந்த ஷரத்துக்களை அகற்றுவது என்றும், சோவியத் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்மானித்தது. இங்கு கொபுர்சேவ் உரை நிகழ்த்தும்போது கடந்த ஞாயிறு லித்வேனிய பாராளுமன்றம் அறிவித்த பிரகடனம் சட்டபூர்வமாக செல்லுபடியாகாது என்று அறிவித்தார்.

சுதந்திரம் பற்றித் தாம் யாருடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தத் தயாரில்லை என்றும், அது லித்வேனியாவாக இருந்தாலும், பேச்சுவார்த்தைகளுக்கு இடமேயில்லை என்று உறுதியாக குறிப்பிட்டார்,

அதேவேளை லித்வேனியா அறிவித்த சுதந்திரப் பிரகடனம் பற்றி சோவியத் யூனியன் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு ஆஸ்பத்திரி சவச்சாலை

# குளிர்சாதனப் பெட்டிகள் மீண்டும் செயற்படுகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புப பொது வைத்தியசாலையிலுள்ள சவச்சாலை குளிர்சாதனப் பெட்டிகள் சுமார் 5 வருடகால இடைவெளியின் பின்பு திருத்தப்பட்டு, மீண்டும் செயல்படுகின்றன.

மேற்படி இரு குளிர்சாதனப் பெட்டிகளில் ஒரே தடவை தலா 4 பிரேதங்கள் வைக்கக்கூடிய வசதிகள் உள்ளன.

கடந்த காலங்களில் இந்த இரண்டும் பழுதடைந்ததால், பிரேதங்கள் வெளியில் கிடந்து துர்நாற்றம் வீசத் தொடங்கின.

இவற்றைத் திருத்துவதென்றால், கொழும்பிலிருந்து தொழில் நுட்பவியலாளர்கள் வரவேண்டும் என்றும், பாது காப்புக் கருதி வர மறுப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலம் தெரிவித்தது.

இதன் அவலத்தை அறிந்த மட்டக்களப்பு - திருமலை ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கிழக்கிலங்கை புனர்வாழ்வு கழகத்தின் மூலம் உடனடியாகத் திருத்த நடவடிக்கை எடுத்தார்.

இதற்கான தொழில்நுட்பவியலாளர்கள் கொழும்பிலிருந்து வருகை தரவேண்டியதில்லை. மட்டக்களப்பிலும் உள்ளனர் என்பதை சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம் தற்போது மறந்து விட்டதா? எனப் பலரும் கேட்கிறார்கள். (37)

# தொழில் பயிற்சிக்கு வெற்றிடங்கள் உண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிறவுண் வீதியில் அமைந்திருக்கும் தொழில் நுட்பக்கல்லூரிக்கு பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு மாணவர்களை உடன் சேர்த்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு உண்டு.

கட்டுவேலை (மேசன்) 10 கிழமைப் பயிற்சி நெறியின் போது நாள் ஒன்றுக்கு ரூபா 25 வழங்கப்படும். அத்தோடு சகல தளபாட வசதிகளும் இலவசமாக [illegible] படும் இதன் பின்னர் தேசிய தொழிற்பயிலுனர் சபை வெளிவாரி பயிற்சி அளிக்கப்பட விரும்புபவர்கள் உடன [illegible]க அதிபருடன் தொடர்பு [illegible]ள்ளவும்.

[illegible]பொருத்துதல் பயிற்சி நெறி (இரண்டு வருடங்கள் பகல்) [illegible] வயதுக்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

நீர் பம்பி இயக்குதலும் பராமரித்தலும் (ஒரு வருட பயிற்சி நெறி)

மேற்கண்ட பயிற்சி நெறிகளைப் பயில விருபுபவர்கள் உடனடியாக யாழ். பிறவுண் வீதியில் அமைந்திருக்கும் தொழில் நுட்பக்கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு தொழில்நுட்ப கல்லூரி அதிபர் திரு. இ. இராஜேந்திரா அறிவிக்கின்றார்.

# பஸ் டிப்போவில் கொள்[illegible]

## இரு ஊழியர் புலிகளால் கைது

(மட்டக்களப்பு)

கடந்த வாரம் மட்டக்களப்பு பஸ் டிப்போவிலிருந்து முப்பத்தையாயிரம் ரூபா காணாமல் போனது தொடர்பாக இரு ஊழியர்கள் விடுதலைப்புலிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் போது இந்த இரு ஊழியர்களும் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இந்தப் பணத்தை தாம் மீண்டும் டிப்போவுக்கு தருவதாகவும் இவர்கள் விசாரணையின் போது தெரிவித்ததாக டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன.

### விடுதலையானோர்க்கு கண்பார்வை

# குறைவு

(கரவெட்டி)

காங்கேசன் துறை தடுப்பு முகாமிலிருந்துவிடுதலையான இளைஞர்கள் பலர் கண் பார்வை குன்றியவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட இவ் இளைஞர்கள் அவர்களின் சித்திரவதை காரணமாகவே கண் பார்வை குறைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (18)

# கல்வி நிலைய ஒன்றிய கூட்டம்

(கரவெட்டி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

எம்மிடம் சகலவகையான பாதணிகளையும்
பெற்றுக்கொள்ளலாம்

**சந்திராஸ்**

**62 - 63, New Market**

யாழ்ப்பாணம்

(B: 261)

லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி
பழைய மாணவர்களுக்கு

**அறிவித்தல்**

மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்களின் பொதுக் கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் நடைபெற இருப்பதால் எதிர்வரும் 16-3-90 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் சகல பழைய மாணவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு
(240) தற்காலிகச் செயலாளர்

வானத்தில் நட்சத்திரம் பூப்பதுபோல்
இன்று வடபகுதி மக்களுக்கு
ஏடு ஒன்று பல பாகங்களிலும்
பூத்திருக்கின்றது அது ஈழநாதமே!

**வாழ்க உன் பணி!**

(Watches, Clocks, Radio,
Gift articles & Fancy Goods)

விளையாட்டு வீரர்களுக்கேற்ற
(Sports) ஸ்போர்ட்ஸ் பொருள்களைப்
பெற்றிட நாடுங்கள்

**பென்சி ரிரேட்ஸ்**

72, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(B- 262)

இன்று ஈழப்போராட்ட மண்ணில் எத்தனையோ

## ஒரு உருக்கமான வேண்டுகோள்



நவரெத்தினம் தவஜோதி (தவா/டேவிற்) வயது 19, ஆறுகால்மடத்தடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மானிப்பாய் இந்துக்கல்லூரி க. பொ. த. (உயர்தர வகுப்பு மாணவன் 28/12/1988, மாலை ஐந்தரை மணியளவில் ஒரு குழுவினரால் வீட்டில் இருந்தவர் விசாரணைக்கெனக் கூட்டிச் செல்லப்பட்டார். இவர் எனது மூத்த மகனின் கடைசி மகனென்ற முறையிலும், தாயாரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றபடியாலும் இவரைப்பற்றிய தகவலறிந்தோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு, தகவல் தருமாறு மன்றாட்டமாகவும், தயவுடனும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பேரன்,
டாக்டர். கே. ஷண்முகம்.

''பிராசத்தி இல்லம்''
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

B/44

## ஒரு லட்சம் ஒதுக்கீடு

(சுதுமலை)

சுழிபுரம் மேற்கு கிராம முன்னேற்ற சங்கத்திற்காக முன்பு கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ள கைத்தொழில் கட்டிடத்தைக்கட்டி முடிப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின்கீழ் மேலும் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (19)

## நன்கொடை எப்போது

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பகுதி மக்களுக்கான ஒருங்கிணைந்த புனர்வாழ்வு உதவித் திட்டத்தின் கீழ் விவசாயம், மீன்பிடி மற்றும்சுயதொழில்களுக்கான நன்கொடைப் பணம் பெறுடவர்களது பட்டியல்கள் யாழ் செயலகத்தினால் மக்கள்வங்கி கன்னாதிட்டிகிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தைப் பெறுவதற்கான திகதியை இந்த வங்கி எப்போது அறிவிக்கும் என்பதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள். (19)

## மேலதிகப் பதிவாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக பிறப்பு, இறப்பு மேலதிக பதிவாளர், திரு. இராசையா, கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் உள்ள நில அளவை திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

1954 ஆம் ஆண்டுக்குப்பிறகு பிறந்தவர்களுக்கான பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் யாழ். செயலகத்தில் இல்லாததற்கும் இவரின் மாற்றத்திற்கும் சம்பந்தமிருப்பதாகக் கூறப்படுகிறது. (தி)

# கொழும்புத்துறைமுகம் திருத்த யப்பான் உதவி

(கொழும்பு)

கொழும்புத்துறைமுகம் யப்பானிய அரசின் உதவியுடன் மேலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இங்குள்ள எலிசபெத் இறங்குதுறை நவீன கொள்கலன்களைக் கையாளும் துறைமுகமாக புனரமைக்கப்படும்.

இங்கு மேலும் அதிக அளவு ஏற்றி இறக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது புதிய பாரம் தூக்கியும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

# ரம்ழானுக்குதேவையான உதவி வழங்க ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களைமுஸ்லிங்களுக்கு பெற்றுக் கொடுக்க உடனடியாகநடவடிக்கைஎடுக்குமாறு ஜனதிபதி ஆர் பிரேமதாஸா சகல திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றின் தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்

உணவுப் பொருட்கள் பிடவைகள், நீர், மின்சாரம் என்பவைற்றை தடையின்றிகிடைக்கவும், தனியார் துறை முஸ்லிம் ஊழியர்கள் ரம்ழான் மாதத்தில் அரைமணி நேரம் லீவு வழங்கவும் நடவடிக்னக எடுக்கப் பட்டுள்ளது.

## பஸ் கவிழ்ந்ததில் ஒருவர் பலி

ஐம்பது பயணிகளுடன் தலவாக்கொல்லயிலிருந்து சென்ற பஸ் வண்டியொன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். நாற்பத்திரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கண்டி நுவரெலியா, லிண்டுல ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நாடகப் பயிற்சி

(உரும்பிராய்)

யாழ்- மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால், சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்கட்கு யாழ்-நாடக அரங்கப் பயிற்சிக் கல்லூரியின் ஊடாக ஒன்பது மாதங்களுக்குத் தொடர்ந்து நாடகப்பயிற்சி அளிப்பதற்கான ஒழுங்குகளை வெளிநாட்டு சமூக அபிவிருத்தி நிதியம் மேற்கொண்டுள்ளது. ஒரு சனசமூக நிலையத்திலிருந்து இரண்டு அங்கத்தவர்கள் மட்டுமே தற்போது இப்பயிற்சி நெறியில் பங்கு பெற வசதியுள்ளமையால் அவர்கள் தமது பெயர் விபரங்களை (இல-23- சிவன்பண்ணைவீதி, யாழ்ப்பாணம்) சம்மேளனக் காரியாலயத்தில் சமர்ப்பிக்கும் வண்ணம் கேட்கப்பட்டுள்ளனர். (32)

## உணவு முத்திரை வழங்க நடவடிக்கை

மட்டக்களப்பு)

உணவு முத்திரை பெறத் தகுதியுடைய புதிய குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

உணவு முத்திரை பெறும் குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் பிரதான உழைப்பாளியில் தங்கியிருந்து அவர் இறந்திருந்தால், அல்லது அவரைப் பிரிந்திருந்தால் அந்தக் குடும்பங்கள், புதிதாகத் திருமணத்தின் பின் உருவாக்கப்பட்ட உணவு முத்திரைக்குத் தகுதியான குடும்பங்கள், இவர்களுக்கு உணவு, மண்ணெண்ணெய் முத்திரையின் 5 ஆவது சுற்று வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். (37)

## எழுத்தூரில் இரவில் திருடர்

(மன்னார்)

மன்னார் எழுத்தூர் பகுதியில் இரவு நேரம் திருடர் நடமாடுவதாக இப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர் குறிப்பாக தனிமையாக இருப்பவர்களின் வீடுகளில் இவர்கள் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர்.

ஈழநாதம்
அதில் ஒரு வீணை
அதை வாசிப்பதற்கு மக்கள் கூட்டம்
மக்கள் மத்தியில் உன் இதய வீணை
நெஞ்சிலே பதிந்துவிட்டாய்
வாழ்க உன் பணி!

**ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்**

இல. 50, கஸ்தூரியார் வீதி,

அடிமை விலங்குகளை உடைத்து

ஆனைக்கோட்டை.

B/44

செயலகத்தில் இல்லாததற் கும் இவரின் மாற்றத்திற்கும் சம்பந்தமிருப்பதாகக் கூறப்ப டுகிறது. (தி)

றினால், சனசமூக நிலையங்க ளின் அங்கத்தவர்கட்கு யாழ்-நாடக அரங்கப் பயிற்சிக் கல் லூரியின் ஊடாக ஒன்பது மாதங்களுக்குத் தொடர்ந்து நாடகப்பயிற்சி அளிப்பதற் கான ஒழுங்குகளை வெளி நாட்டு சமூக அபிவிருத்தி நிதியம் மேற்கொண்டுள்ளது. ஒரு சனசமூக நிலையத்திலி ருந்து இரண்டு அங்கத்தவர் கள் மட்டுமே தற்போது இப் பயிற்சி நெறியில் பங்கு பெற வசதியுள்ளமையால் அவர்கள் தமது பெயர் விபரங்களை (இல-23- சிவன்பண்ணைவீதி, யாழ்ப்பாணம்) சம்மேளனக் காரியாலயத்தில் சமர்ப்பிக் கும் வண்ணம் கேட்கப்பட்டுள் ளனர். (32)

இவர்களுக்கு உணவு, மண் ணெண்ணெய் முத்திரையின் 5 ஆவது சுற்று வழங்குவ தற்கு அனுமதியளிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். (37)

## எழுத்தூரில் இரவில் திருடர்

(மன்னார்)

மன்னார் எழுத்தூர் பகுதி யில் இரவு நேரம் திருடர் நடமாடுவதாக இப்பகுதி மக் கள் அச்சம் தெரிவிக்கின்றனர் குறிப்பாக தனிமையாக இருப் பவர்களின் வீடுகளில் இவர்கள் தமது கைவரிசை யைக் காட்டுகின்றனர்.

---

# பென்சி ரிரேட்ஸ்

72, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(B- 262)

---

இன்று ஈழப்போராட்ட மண்ணில் எத்தனையோ பேர், தம்மை மறந்து, தமது பெற்றோரை மறந்து தமது உடன் பிறப்புக்களை மறந்து வீர மரணம் மடைந்துள்ளார்கள். மறைந்த வீரவேங்கைகளே உங்கள் இலட்சியம் தமிழ் மண்ணில் உதிக்கத்தான் போகின்றது.

★

# கணபதி ஸ்ரோர்ஸ்

★

பலசரக்குச் சாமான் தூய நிறையுடனும் மலிவு விலையில் பெற நாட வேண்டிய இடம்

## கணபதி ஸ்ரோர்ஸ்

கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(B. 267)

---

ஈழநாதம்

அதில் ஒரு வீணை

அதை வாசிப்பதற்கு மக்கள் கூட்டம்

மக்கள் மத்தியில் உன் இதய வீணை

நெஞ்சிலே பதிந்துவிட்டாய்

வாழ்க உன் பணி!

# ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்

இல. 50, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

இன்று யாழ்நகரில் மதுபான வகைகளை

மொத்தமாகவும், சில்லறையாகவும்

பெற்றிட சிறந்த இடம்!

❋ உள்நாட்டுச் சாராயம்

❋ வெளிநாட்டு பிறண்டி, விஸ்கி

போன்றவற்றிற்கு நம்பிக்கைக்கு பாத்திரமானவர்கள்

# ஆ. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்

இல. 50, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்.

(B. 260)

---

அடிமை விலங்குகளை உடைத்து

யாழ் நகருக்குள் புகுந்து விட்டார்கள்

எமது வீரவேங்கை மன்னர்கள்

எட்டப்பன் ஓடி விட்டான்

வீர வேங்கைகளின் பலம் ஓங்கிக் கொண்டே வருகின்றது.

வாழ்க தமிழினம்! மலர்க தமிழீழம்!!

# வி. ரி. அன் சன்ஸ்

பல் வைத்தியரும், கண் வைத்தியரும்

302, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

மீண்டும் மறவாதீர்கள்

## வி. ரி. அன் சன்ஸ்

முகாமையாளர்

பிரபல டாக்டர் றெஜி சொலமன்

(B - 264)

---

சுவையான தரமான

ஐஸ்கிறீம் வகைகள், [illegible]ன வகைகள், கேக் வகைகள், மற்றும் சிற்றுண்டி வகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

# ராஜா கிறீம் ஹவுஸ்

36, கஸ்தூரியார் றோட்

யாழ்ப்பாணம்.

கிளை:

நியூராஜா கிறீம் கவுஸ் & கபே

ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

(B. 256)

## சிந்தனைக்கு

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்தில் சாதல்கண்டும்
சிந்தையிரங்காரடி - கிளியே
செம்மை மறந்தாரடி

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 15 - 03 - 90

# சலோ, சலோ, ஜல்தி சலோ!

வடக்கு மாகாணத்திலிருந்து இந்திய இராணுவம் இன்று முற்றாக வெளியேறவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இன்றுடன் வெளியேறிவிடுமென்று நம்புவோம்; எதிர்பார்ப்போம்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் சீனக்குடாவில் மட்டுமே இப்பொழுது இந்திய இராணுவம் இருக்கிறது. இம்மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இங்கிருந்தும் இந்திய இராணுவம் முற்றாக வெளியேறிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாதம் முப்பத்தோராம் தேதிக்குள் இலங்கையிலிருந்து இந்திய இராணுவம் முற்றாக விலக்கிக் கொள்ளப்படும் என்று இந்தியப் பிரதமர் வி. பி. சிங் மட்டுமல்ல இந்திய பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய அரசின் கொள்கை விளக்க உரையிலும் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனும் உறுதிபடத் தெரிவித்திருக்கிறார்.

போகிற போக்கில் பார்த்தால் இன்னும் சில தினங்களுக்குள்ளேயே இந்திய இராணுவம் இங்கிருந்து முற்றாக வெளியேறிவிடுமென்றே தோன்றுகிறது.

எழுபத்தையாயிரத்திலிருந்து ஒரு இலட்சம் துருப்புக்கள் வரை நிலைகொண்டிருந்த ஈழத்தில் இன்று ஆயிரத்து ஐநூறு துருப்புக்கள்தான் இருப்பதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

இலங்கையில் ஜே. ஆர். தலைமையிலான சிறிலங்கா அரசின் படைகள் உரிமைக்காகப் போராடிய போராளிகளை அடக்கி ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு பொதுமக்களையே அழித்து ஒழிக்கும் செயல்களிலீடுபட்டபோது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நல்லதோர் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நடுவராக நின்று பணியாற்ற அப்போது பிரதமராக இருந்த அன்னை இந்திரா முன்வந்தார்.

சர்வகட்சி மாநாடென்றும் வட்டமேஜை மாநாடென்றும் காலத்தை இழுத்தடித்த ஜே. ஆர். அன்னை இந்திரா மறைந்ததும் பிரதமராக வந்த ராஜீவ்காந்தியை தான் நினைத்தபடி ஆட்டுவித்தார்.

நடுவராக நின்ற இந்தியா ராஜீவின் தலைமையில்

# ஊனமுற்றோர் கல்வியில் ஏன் அக்கறையீனம்?

ஊனமடைந்தவர்களின் புனர்வாழ்வு என்பது அவர்களுக்கு நியாயமான வருமானம் தேடித்தரக்கூடிய - நிரந்தர வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதாலேயே பூரணமடையும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கமாட்டாது.

அவர்கள் தகுந்த வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கு போதியளவு கல்வியறிவு அவசியமாகும்.

ஊனமுற்ற நிலையில் இருக்கும் சிறுவர்கட்கு கல்வி ஊக்குவிப்பு வசதிகளைச் செய்து அவர்கட்கு உளவியல் பாதிப்பு ஏற்படாத வகையில் போதிய கல்வி புகட்டப்பட்டு சமூக அந்தஸ்து ஏற்படுத்திக் கொடுத்தல் மானிட நேயமுள்ளவர்களின் கடமையாகும்.

ஆனால் இன்று தமிழ்பேசும் விழிப்புலனற்ற சிறுவர்களின் கல்வி வாய்ப்பில் மாபெரும் தடை தோன்றியுள்ளது.

அதாவது விழிப்புலனற்றவர் எழுத வாசிக்கும் 'பிரெய்ல்' என்ற முறைதெரிந்த பார்வைத்திறனுடைய ஆசிரியர் (தமிழ்மொழி தெரிந்தவர்) ஒரே ஒருவர் மட்டும் இருக்கிறார். அவரும் பென்சன் வயதினை எட்ட வருகிறார். இவர் பென்சனில் சென்றுவிட்டால் அதன்பின் விழிப்புலனற்றவர்களின் கல்வி வசதி எப்படி இருக்கும்?

இதுவரை விழிப்புலனற்ற பலர் யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியாக வெளிவந்துள்ளார்கள். சிலர் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் தமிழ்பேசும் விழிப்புலனற்றவர்கள் கல்வி வசதி மறுக்கப்படுதல், அவர்களின் அடிப்படை மனித உரிமை மீறல் போலாகாதா?

பிரெய்லி முறை தெரிந்த பார்வைத் திறனுடைய ஆசிரியர் பிரச்சினை பற்றி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றுபவரும், யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தைச் சேர்ந்தவருமான திரு. வி. சுப்பிரமணியமும் அவர்

கற்க வேண்டியுள்ளது. அதனால் பார்வையற்ற சிறுபிள்ளைகளின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தனிமையில் விடுதியில் இருந்து கஷ்டப்படமாட்டார்களா? சமாளிப்பார்களா? என்ற பயம்காரணமாக ஓரளவுவயது வந்த பின்னரேதான் அவர்களை நவில்ட் பாடசாலை விடுதியில் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். அவர்கள் 8ஆம் வகுப்புவரை அங்கு கல்வி கற்றபின் மேலும் திறமையும் கல்வியில் ஆர்வமும் உள்ள மாணவர்கள் சாதாரண பாடசாலையில் சேர்ந்து இடைத்தரக் கல்வியைக் கற்று பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை எழுதுகிறார்கள். இக்காலகட்டத்தில்தான் அவர்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். பிரெய்லி முறையில் எழுதப்பட்ட குறிப்புகளும், புத்தகங்களும் போதியளவு இல்லாததும், ஒலிப்

### அசோகன்

பதிவு நாடாவில் பதிவு செய்யப்பட்ட விரிவுரை வசதிகள் இல்லாதிருப்பதும், பிரெய்லி முறையும் சாதாரண எழுத்துக்களை வாசிக்கத்தக்க பார்வைத்திறனும் உடைய ஆசிரியர்கள் இல்லாதிருப்பதுமே அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் ஆகும். தற்போது பிரெய்லி முறை தெரிந்த பார்வைத் திறனுடைய ஆசிரியர் ஒரே ஒருவர்தான் வடமாகாணத்தில் இருக்கிறார். அவரும் பென்சன் வயதினை எட்டுகிறார். அவரும் பென்சனில் சென்றுவிட்டால் பார்வையற்றோர் கல்விவசதி பாதிப்படையும்' என்றார்.

கேள்வி:- தற்போது இப்படியான விஷேட ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாதற்கு ஏதாவது குறிப்பிடத்தகுந்த காரணங்கள் இருக்குமா? எனக் கேட்டேன்.

பதில்:- ''ஆம் இப்படியான ஆசிரியர்கட்கான பிரேய்லி முறைப்பயிற்சி எமது பகுதி

மாக இருக்கலாம்'' என்றார்.

கேள்வி:- ''அப்படியானால் இப்பிரச்சினையை எப்படி நிவர்த்தி செய்யலாம் என நினைக்கிறீர்கள்?'' எனக்கேட்டேன்.

பதில்:- இப்பிரச்சினையைத் தீர்ப்பது ஒன்றும் பெரிய கஷ்டமான விடயமில்லை. எங்கள் மத்தியில் உள்ள ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் தமிழ் மொழி மூலமாக இப்பயிற்சி நெறியினை ஆரம்பித்து விட்டால் இப்பிரச்சினை இலகுவாகத் தீர்க்கப்பட்டுவிடும்'' என்றார்.

கேள்வி:- புரியதொரு பயிற்சிநெறி தொடங்குவது என்பது எவ்வளவு பெரிய விடயம் இப்படி இலகுவாகப் பதில் சொல்லுகிறீர்களே? எனக் கேட்டேன்,

பதில்;- ''பொதுவான ஆசிரியர் பயிற்சிக்கும் - பிரெய்லி முறை தெரிந்த விஷேட ஆசிரியர் பயிற்சிக்கும் இடையில் ஒரேஒரு பாடத்தில்த்தான் வித்தியாசம் இருக்கிறது. அதாவது பிரெய்லி முறையும் பார்வையற்றோர் உளவியலும் என்றதொரு பாடம்தான் வித்தியாசமாக இருக்கும். மற்றைய பாடங்கள் எல்லாம் சாதாரணமாக பயிற்சிக்கலாசாலையில் படிப்பிக்கப்படும் பாடங்கள் தான். அதனால் பயிற்சிக் கலாசாலையில் பிரெய்லி முறை பற்றியும், பார்வையற்றோரின் உளவியல்பற்றியும் விரிவுரையை ஏற்பாடு செய்தால். விஷேட ஆசிரியர் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவேற்றலாம்''

கேள்வி:- தமிழ் மொழியில் இப்பாடத்தினைப் போதிக்கத்தக்க விரிவுரையாளர் இருக்கிறாரா?

பதில்:- தற்போது இப்படியான பாடநெறி போதிக்கத் தகுந்த ஒரேஒரு ஆசிரியர் தான் வடமாகாணத்திலேயே இருக்கிறார். அவர் போதியளவு அனுபவம் பெற்றவராகவும் இருக்கிறார் அவரையே விரிவுரையாளராக நியமித்தால் இப்பயிற்சி நெறியில் போதனாசிரியர். விரிவுரையாளர் இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. இவ

## ஒரு வருடத்தில் ஒப்பற்ற சாதனை

(சுழிபுரம்)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவின் கீழ் உள்ள வட்டுகிழக்கு பிரதேச கிராம சேவகர் பகுதிக்கான கிராம சேவையாளர்களின் இடமாற்றம் கடந்த ஒரு வருடத்தில் மாத்திரம் ஆறுதடவைகள் நடைபெற்றுக் குட்டிச்சாதனை புரிந்துள்ளது. தற்போது கடமையாற்றும் 7ஆவது கிராமசேவகருக்கும் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. இப்பகுதியில் உள்ள ஒரு செயலக மேலதிகாரியின் சித்து விளையாட்டே இந்த மாற்றங்களுக்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது. (17)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை ஸ்தாபிக்கும் முகமாக நாளை வெள்ளிக்கிழமை மேற்படி பாடசாலை மண்டபத்தில் கொத்தணி அதிபர் ப. அரியரத்தினம் தலைமையில் பழைய மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

## சைக்கிள் கொட்டகை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் சைக்கிள் கொட்டகை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. (37)

## நாய்களும் வீடு திரும்புகின்றன!!

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் காணாமல் போய்விட்ட, வளர்ப்பு நாய்கள் பல வீடு திரும்பியுள்ளன. இந்தியராணுவம் வன்னி மாவட்டத்தில் முகாம் இட்டதனாலேயே இந் நாய்கள் வீட்டிலிருந்து, முகாமுக்குச் சென்றன.

அங்கு சென்ற நாய்கள் இந்திய ராணுவத்தினர் போரும். பூரி, ரொட்டித்துண்டு, எலும்புத் துண்டு ஆகியவற்றையும் சாப்பிட்டு முகாம்களிலேயே வாழ்ந்துவந்தன

வன்னி மாவட்டட்திலிருந்து இந்திய ராணுவத்தினர் திரும்பியதைத் தொடர்ந்து அவர்கள் பின்னால் சென்ற நாய்களும் வீடு திரும்பின. இந்த

## ஊர்சுற்றி

எழுதுவது

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் வெளியூர்ப்பத்திரிகையாளர்களும் இபபொழுது யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்து வருகிறார்கள் என்று நேற்று நான் எழுதியிருந்தேனல்லவா?

நேற்றுக் காலையில் சென்னையிலிருந்து ஒரு பத்திரிகையாளர் திடீரென்று வந்துசேர்ந்தார்.

இதற்கு முன்னரும் இவர் இரண்டு தடவைகள் யாழ்ப்பாணம் வந்து போயிருக்கிறார்.

முதல் தடவை வந்தபோது இந்திய இராணுவத்தின் சோதனைகள் கெடுபிடிகள் ஒருபுறம் இவர்களோடு ஒட்டிநின்ற கூட்டத்தினர் தண்டாக்கள் மறுபுறம். இக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் இவரது கன்னத்தில் அறைந்துமிருக்கிறான்.

இத்தனை வாவேற்புக்களையும் வாங்கிக்கட்டிக்கொண்டு சென்னை திரும்பிய இவர் ''ஈழத்தின் ஓலம்'' என்ற தலைப்பில் 'ஜனியர் போஸ்ட்' என்ற வார சஞ்சிகையில் தொடர் கட்டுரை எழுதியிருந்தார். இக் கட்டுரைக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும்வரவேற்புஇருந்தது. இப்பொழுது இந்தப் பத்திரிகையாளர் யார் என்று உங்களில் பலருக்கும் தெரிந்திருக்கும்.

அவர்தான் ஏ. எஸ். பன்னீர்ச்செல்வம் என்ற இளைஞர்.

சென்ற வருடமும் இவர் இங்கு வந்திருந்தார். அப்பொழுதும் அதே கெடுபிடிகளிருந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கு அறை எடுத்துக்கொண்டதும் அறைப்பையனிடம் ''இங்கு யாராவது வெளியாட்கள் வந்து விசாரித்தால் விபரம் சொல்ல வேண்டாம்'' என்று நான் சொல்லிக்கொண்டிருந்தேன். அதேசமயம் மற்றொரு பையன் வந்து ''மிஸ்டர் பன்னீர்ச்செல்வத்துக்கு கோல்வந்திருக்கு'' என்று சொன்னான்.

யாருக்குமே தெரியாமல் வந்து சில நிமிஷங்கள் கூட ஆகவில்லை. ஆச்சரியம்!

பன்னீர் தொலைபேசியில் பேசிவிட்டு வந்தார். இந்திய இராணுவத்தின் யாழ். நகர கமாண்டர் தான்

எழுபத்தையாயிரத்திலிருந்து ஒரு இலட்சம் துருப்புக்கள் வரை நிலைகொண்டிருந்த ஈழத்தில் இன்று ஆயிரத்து ஐநூறு துருப்புக்கள்தான் இருப்பதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருக்கிறார்.

இலங்கையில் ஜே. ஆர். தலைமையிலான சிறிலங்கா அரசின் படைகள் உரிமைக்காகப் போராடிய போராளிகளை அடக்கி ஒடுக்குவதாகக் கூறிக்கொண்டு பொதுமக்களையே அழித்து ஒழிக்கும் செயல்களிலீடுபட்டபோது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நல்லதோர் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நடுவராக நின்று பணியாற்ற அப்போது பிரதமராக இருந்த அன்னை இந்திரா முன்வந்தார்.

சர்வகட்சி மாநாடென்றும் வட்டமேஜை மாநாடென்றும் காலத்தை இழுத்தடித்த ஜே. ஆர். அன்னை இந்திரா மறைந்ததும் பிரதமராக வந்த ராஜீவ்காந்தியை தான் நினைத்தபடி ஆட்டுவித்தார்.

நடுவராக நின்ற இந்தியா ராஜீவின் தலைமையில் எதிரிபக்கம் சார்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியது.

சிங்களப் படைகளுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் மோதல் ஏற்படாமல் தடுப்பதற்கு என்று ஈழத்துக்கு வந்தது அமைதிப்படை என்ற இந்திய இராணுவம்.

நாட்டில் அமைதி நிலவுவதற்கு ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று கூறி போராளிகளிடமிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்கு வந்த இந்திய இராணுவம் நாட்டை விட்டே ஓடிமறைந்திருந்தவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கிப் பாதுகாப்பளித்து மக்களுடன் நின்ற போராளிகளுடன் மோதலை ஏற்படுத்தியது.

இது மட்டுமா போராளிகள் சிறைப்பிடித்த தங்கள் சிப்பாய்களை போராளிகளுடன் பேச்சு நடத்தி பகிரங்கமாகக் கையேற்றுக்கொண்ட மறுநிமிடம் ''எங்கே புலிகள்'' என்று பொதுமக்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கிய 'சுத்தவீரர்கள்' அமைதிப்படை என்ற இந்திய இராணுவம்.

மருத்துவமனைகள், ஆலயங்கள், தேவாலயங்கள், மசூதிகள், கல்விக்கூடங்கள் சிங்கள இராணுவமே நுழைய அஞ்சிய இடங்கள்.

ஆனால் இந்திய இராணுவம் இந்த இடங்களுக்குள்ளும் நுழைந்து பெண்கள் குழந்தைகளைக்கூட விட்டுவைக்காமல் கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொன்றது.

சித்திரவதை, கற்பழிப்பு, கொலை - இலங்கை மக்கள் கண்டும் கேட்டுமறியாத அளவுக்கு இந்திய இராணுவம் சாதனை செய்திருக்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேசமாகப் பிரிந்த போது அதற்கு மூலகாரணமாக இருந்த இந்திய இராணுவம் அங்கும் இதேபோன்று அட்டூழியங்கள் புரிந்ததும் உடனடியாகவே அதைத் திருப்பி அழைத்தார் அன்னை இந்திரா.

இன்றும் அந்த அட்டூழியத்தை பங்களாதேசம் மறக்கவில்லை.

ஈழத்தமிழ் மக்களும் டில்லி தர்பாரையும் இந்திய இராணுவத்தையும் என்றும் மறக்கமாட்டார்கள். அட்டூழியத்தின் சுவடுகள் அழியாமல் கிடக்கின்றன.

இதனால்தான் இந்தியப்படையை போங்கள் விரைந்து போங்கள் என்று கூறுகிறோம்.

சலோ, சலோ ஜல்தி சலோ!

---

விட்டால் அதன்பின் விழிப்புலனற்றவர்களின் கல்வி வசதி எப்படி இருக்கும்?

இதுவரை விழிப்புலனற்ற பலர் யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியாக வெளிவந்துள்ளார்கள். சிலர் பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் தமிழ்பேசும் விழிப்புலனற்றவர்கள் கல்வி வசதி மறுக்கப்படுதல், அவர்களின் அடிப்படை மனித உரிமை மீறல் போலாகாதா?

பிரெய்லி முறை தெரிந்த பார்வைத் திறனுடைய ஆசிரியர் பிரச்சினை பற்றி யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றுபவரும், யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தைச் சேந்தவருமான திரு. வி. சுப்பிரமணியம் அவர்களைச் சந்தித்து சில கேள்விகளைக் கேட்டேன்.

கேள்வி:- 'தமிழ்பேசும் பகுதியில் விழிப்புலனற்றோருக்கான கல்வி வசதிகள் எப்படி இருக்கின்றது?'

பதில்:- விழிப்புலனற்றவர்கள் கைதடி நவில்ட் பாடசாலையிலேயே தங்கள் ஆரம்பக் கல்வியினைக் கற்று வருகிறார்கள். அவர்கள் அங்கேயே தங்கியிருந்து கல்வி ஆசிரியர்கள் இல்லாதிருப்பதுமே அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் ஆகும். தற்போது பிரெய்லி முறை தெரிந்த பார்வைத் திறனுடைய ஆசிரியர் ஒரே ஒருவர்தான் வடமாகாணத்தில் இருக்கிறார். அவரும் பென்சன் வயதினை எட்டுகிறார். அவரும் பென்சனில் சென்றுவிட்டால் பார்வையற்றோர் கல்விவசதி பாதிப்படையும்' என்றார்.

கேள்வி:- தற்போது இப்படியான விஷேட ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படாதற்கு ஏதாவது குறிப்பிடத்தகுந்த காரணங்கள் இருக்குமா? எனக் கேட்டேன்.

பதில்:- ''ஆம் இப்படியான ஆசிரியர்கட்கான பிரேய்லி முறைப்பயிற்சி எமது பகுதி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இல்லாதிருப்பது தான் இதற்கு முக்கிய காரணம். இப்போ 'மகரகம' ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்தான் இப்படியான பயிற்சி நெறி இருக்கிறது. அதுவும் சிங்கள மொழியில்தான் இருக்கிறது. சிங்கள மொழியில் பயிற்சி பெற்று பின் தமிழ் மொழியில் கற்பித்தல் இயலாது என்பதுதான் இப்படியான விஷேட ஆசிரியர் நியமனம் நடைபெறாததின் காரண பயிற்சிக் கலாசாலையில் பிரெய்லி முறை பற்றியும், பார்வையற்றோரின் உளவியல்பற்றியும் விரிவுரையை ஏற்பாடு செய்தால். விஷேட ஆசிரியர் பயிற்சியினை வெற்றிகரமாக நிறைவேற்றலாம்''

கேள்வி:- தமிழ் மொழியில் இப்பாடத்தினைப் போதிக்கத்தக்க விரிவுரையாளர் இருக்கிறாரா?

பதில்:- தற்போது இப்படியான பாடநெறி போதிக்கத் தகுந்த ஒரேஒரு ஆசிரியர் தான் வடமாகாணத்திலேயே இருக்கிறார். அவர் போதியளவு அனுபவம் பெற்றவராகவும் இருக்கிறார் அவரையே விரிவுரையாளராக நியமித்தால் இப்பயிற்சி நெறியில் போதனாசிரியர். விரிவுரையாளர் இல்லை என்ற பிரச்சினைக்கே இடமில்லை. இவரும் பென்சனில் போய்விட்டால் ரிவுரையாளர் ஒருவரை நியமித்தலிலும் பிரச்சினைகள் தோன்றாலாம்.

கேள்வி:- இது ஒரு சாதாரண பிரச்சினை அல்ல. தமிழ் பேசும் எம்மத்தியிலுள்ள விழிப்புலன் இழந்த அனைவரையுமே பாதிக்கின்ற பிரச்சினை. அவர்களின் அடிப்படைக் கல்வி வசதியை மறுக்கின்ற பிரச்சினை. இதனை நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகட்கு விளக்கி இதற்கான பரிகாரத்தினைக் காண முயற்சித்தீர்களா? எனக் கேட்டேன்.

பதில்:- இதுபற்றி இன்று நேற்றல்ல கிட்டத்தட்ட 10 வருடங்களாக பல மகஜர்களை அனுப்பியும், அதிகாரிகளைச் சந்தித்தும் இப்பிரச்சினை பற்றி விளக்கியுள்ளோம். ஆனால் எல்லாமே 'செவிடன் காதில் ஊதிய சங்கு போலாகிவிட்டது' என்றார் சலிப்புடனே.

1981ஆம் ஆண்டினைச் சர்வதேச ஊனமுற்றோர் புனர்வாழ்வு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. 1981 தொடக்கம் 1991ஆம் ஆண்டளவில் உள்ள பத்து வருடங்களும் புனர்வாழ்வுக்கான தசாப்தம் என அறிவித்தது. அதில் எட்டு ஆண்டுகள் உருண்டுவிட்டன. நாங்கள் சாதித்தது என்ன? பார்வையற்றோர் கல்வியில் பாதிப்பு ஏற்பட பெரும்தடை ... நாங்கள் அனுமதிக்கலா... எமது சமூகத்தில் உள்... அதிகாரிகள், நிபுணர்கள், மானிடநேயம் கொண்டோர்கள் எல்லாம் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து செயல்பட வேண்டாமா?

சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், எமது மாவட்ட நிர்வாகமும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இது சம்பந்தமாகத் திட்டமிட்டு செயல்பட்டு பார்வையற்றோர் கல்வியில் ஏற்பட்டுள்ள இத்தடையினை நீக்க வேண்டும்.

---

# மீண்டும் கொழுவி இழுக்கின்றார்கள்

ஆசிரியருக்கு

தாங்கள் மக்களின் குறைபாடுகளை தங்கள் பத்திரிகை மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருவதானால் இவ் விடயத்தையும் தங்களுக்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

## மக்கள் மடல்

எங்கள் கிராமத்தில் பெரும்பகுதிக்கு அபிவிருத்திசபை மூலமாக அல்லது, மின்சார சபை நேரடியாக மின்சாரம் வழங்குகிறது. எனவே தாயில்லாத பிள்ளைபோல எம்மக்கள் பல நாட்களுக்கு மின்சாரம் இன்றி தவிக்க வேண்டியுள்ளது. அமைதிப் படை இருந்த காலத்தில் பகிரங்கமாகவே இரவும் பகலும் சட்ட விரோத மின்சாரம் எடுத்தவர்கள் அமைதிப்படை போய் விடுதலைப் புலிகள் கட்டுப்பாடு வந்ததும் கொஞ்சம் குறைந்திருந்தது. ஆனால் சில நாட்களுக்குப் பின் மீண்டும் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டார்கள். நிரந்தரமாக கம்பி கொழுவியவர்களால் எங்களுக்கு அதிக தொல்லை இல்லை. ஆனால் மாலை ஆறு மணியளவில் கம்பியும் தடியும் கொண்டு கொழுவ முயல்பவர்களால்தான் தொல்லை. அவர்களின் முயற்சியால் கம்பிகள் நடனமாட மின்சாரம் தடைப்பட்டு பல இரவுகள் மின்சாரம் இன்றி தவிக்க வேண்டியுள்ளது. ஒரே வீதியில் ஒரு லைனில் மின்சாரம் வர அடுத்த லைனில் மின்சாரம் இல்லை. இதனால் படிக்கும் மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் மற்றும் இம்மாதம் நடக்கவிருக்கும் க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை எடுக்கவிருக்கும் மாணவர்களுக்கும் தொல்லையாகவுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய வழியில்லையா? இப்பகுதி எம்மியக்கத்தினருக்கு அக்கறையில்லையா? இனியேனும் எம்மியக்கத்தவர்கள் எம்மக்களின் குறையை தீர்த்து வைப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

வே. கண்ணன்

அல்வாய்

---

## திரும்புகின்றன!!

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் காணாமல் போய்விட்ட, வளர்ப்பு நாய்கள் பல வீடு திரும்பியுள்ளன. இந்தியராணுவம் வன்னி மாவட்டத்தில் முகாம் இட்டதனாலேயே இந் நாய்கள் வீட்டிலிருந்து, முகாமுக்குச் சென்றன.

அங்கு சென்ற நாய்கள் இந்திய ராணுவத்தினர் போரும். பூரி, ரொட்டித்துண்டு, எலும்புத் துண்டு ஆகியவற்றையும் சாப்பிட்டு முகாம்களிலேயே வாழ்ந்துவந்தன

வன்னி மாவட்டட்திலிருந்து இந்திய ராணுவத்தினர் திரும்பியதைத் தொடர்ந்து அவர்கள் பின்னால் சென்ற நாய்களும் வீடு திரும்பின. இந்த நாய்களில் சில குட்டிகளுடனும் திரும்பியுள்ளன! (31)

---

## ...ளபாடங்கள் சேதமாக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

காரைநகர்ப் பகுதியிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றினுள் புகுந்த இனந்தெரியாத சிலர் அங்குள்ள தளபாடங்களைச் சேதப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. இதே போல இங்குள்ள தனியார் கல்வி நிலையம் ஒன்றின் தளபாடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

---

## வீதிக்கு வணசிங்கா பெயர்

(மட்டக்களப்பு)

காலஞ்சென்ற சிரேஷ்ட தொழிற்சங்கவாதி அமரர் டி. எஸ். கே. வணசிங்காவின் ஓராண்டு நினைவு தினம் மாவட்ட ரீதியால் அனுஷ்டிக்க மட்டக்களப்பு மாவட்ட தொழிற் சங்க சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

அன்னாரின் நினைவு தினமான இம்மாதம் 31ஆம் திகதி 'பெயிலி வீதி'க்கு அமரர் டி. எஸ். கே. வணசிங்கா வீதி என... பெயர் மாற்றம் செய்யு... சம்மேளனம் மட்டக்...பு மாநகரசபையைக் ...டுள்ளது.

---

...பொழுதும் அதே கெடுபிடிகளிருந்தன.

யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்குவதற்கு அறை எடுத்துக் கொண்டதும் அறைப்பையனிடம் ''இங்கு யாராவது வெளியாட்கள் வந்து விசாரித்தால் விபரம் சொல்ல வேண்டாம்'' என்று நான் சொல்லிக்கொண்டிருந்தேன். அதேசமயம் மற்றொரு பையன் வந்து ''மிஸ்டர் பன்னீர்ச்செல்வத்துக்கு கோல்வந்திருக்கு'' என்று சொன்னான்.

யாருக்குமே தெரியாமல் வந்து சில நிமிஷங்கள் கூட ஆகவில்லை. ஆச்சரியம்!

பன்னீர் தொலைபேசியில் பேசிவிட்டு வந்தார். இந்திய இராணுவத்தின் யாழ். நகர கமாண்டர் தான் சௌக்கியம் விசாரித்தார் என்று சொன்னார்.

பன்னீர் வருவது வழியில் சோதனையிட்ட ஐ. பி. கே. எவ். மூலம் மேலிடத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மேலிடம் யாழ். நகரிலுள்ள ஹோட்டல்களுக்கு பத்திரிகையாளர் ஒருவர் வருகிறார். அவர் வந்ததும் எங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்று உத்தரவு போட்டிருந்திருக்கிறது.

சென்ற தடவை வந்திருந்தபோது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க வேண்டுமென்றே பன்னீர் வந்திருந்தார். அவர் வந்த மறுநாள் தான் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாக இந்திய வானொலி பெரும்புரளியைக் கிளப்பியிருந்தது. இதைமுதலில்நம்பவில்லை. ஆனாலும் திருப்பித்திருப்பி ஒரே பொய்யைச் சொல்லி மெய்யாக்கும் முயற்சியில் பன்னீர்மட்டுமல்லநானுமே தழம்பிப் போனேன். பன்னீர் அழுதேவிட்டார்.

முதல்நாளிரவு பி.பி.ஸி. செய்தி அது பொய் என்று அறிவித்ததை மறுநாள் அதிகாலையிலேயே பன்னீரிடம் போய்த் தெரிவித்தேன்.

அன்று நண்பகலே ஐ.பி.கே.எவ். கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் காட்டுக்குப் போனார்.

பின்னர் இவரது நான்கைந்து கட்டுரைகள் ''இந்தியா வீக்'' என்ற ஆங்கில வார சஞ்சிகையில் படங்களுடன் வெளி வந்தது.

இரண்டு தடவைகளும் கெடுபிடிகளுக்கு மத்தியில் வந்து சிரமப்பட்ட பன்னீர் நேற்றுக்காலையில் வந்ததும் ''சென்னையிலிருந்து பங்களூருக்குவந்தது மாதிரி இருக்கு'' என்றார்.

மெயில் ரயிலில் முதலாம் வகுப்பு படுக்கை வசதியுள்ள வண்டியில் எதுவித தொந்தரவும் இல்லாமல் சுகமாக வந்து சேர்ந்தது அவருக்கே ஆச்சரியம்.

யாழ்ப்பாணம் இப்படி மாறிவிட்டதா, இவ்வளவு சீக்கிரமாகவா? என்று ஆச்சரியப்பட்டார். தொலைபேசியும் வேலை செய்கிறதா என்று பெரிதும் ஆச்சரியப்பட்டார்.

இனி என்ன எழுதப் போகிறாரோ பார்ப்போம்.

ஈழநாதம்

# சர்வகட்சி செயற்குழு கூட்டம் மீண்டும் ஏப்ரல் 3 இல் நடைபெறும்

(கொழும்பு)

சர்வகட்சி மாநாட்டு பிரதிநிதிகள் செயற்குழு முதலாவது கூட்டம் நேற்றுக்காலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

பத்தொன்பது அரசியற்கட்சிகளில் தலா இரு பேராளர்கள் இதில் கலந்து கொண்டனர்

செயற்குழுவின் பணிகள் நடைமுறைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

செயற்குழு தெரிவித்த இருபது விடயங்களை மூன்று தொகுதிகளின் கீழ் இனம் பிரிக்க வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டது.

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம், ஜனநாயக செயல் முறையினைவலுப்படுத்துதல், சமூக பொருதார விடயங்கள் என்பனவே அந்த மூன்று தொகுதிகளாகும்

அதிகாரப் பரவலாக்கல் தேர்தல் சீர்திருத்தங்கள். சர்வசனவாக்குரிமை விகிதாசார பிரதிநிதித்துவத்தின் இறுதி எல்லை, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம், தகவல் ஊடகங்களின் சுதந்திரம், மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துதல், கல்விக் கொள்கை எல்லாஇன மக்களை சமத்துவமாகவும் ஒப்புரவாகவும் நடாத்துல் தேசிய காணிக் கொள்கை யொன்றை வகுத்தல், ஜனநாயக செயல் முறையினை வலுப்படுத்துதல், அடிப்படை உரிமையினைப் பாதுகாத்தல், நாடு முழுவதும் உள்ள எல்லோரதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல், கட்சி மாற்றம் சம்பந்தமாக அரசியல் அமைப்பிலுள்ள ஏற்பாடுகளின் முறை வழுக்கலை நீக்குதல், அரசாங்க கணக்கு குழுவுக்கு அதிக அதிகாரங்களை வழங்குதல், பாராளுமன்ற துணைக் குழுக்களை அதிகஅளவில்பயன்படுத்துத்ல்

எல்லாக் கட்சிகளினதும் எம்.பிக்கள்மாவட்டபொதுக் கூட்டங்களில் பங்குபற்றுதல் ஒவ்வொரு எம். பி. க்களுக்கும் சட்டத்துறை உதவியாளர் இருவரை நியமித்தல், 18-30 க்கும் இடையிலுள்ள வயதுடையவர்கள் தேர்தல் டாப்பில் பதிவு செய்தல், மகாணசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை மாற்றுவீதத்தை அந்த வயதெல்லை உள்ளவர்களைக்கொண்டு தேர்தல் மூலம் நிரப்புதல், அல்லது 18-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எல்லாக் கட்சியின் வேட்பாளர் எண்ணிக்கை நாற்பது வீதத்தை வகிக்குமாறு நியமனங்கள் செய்வதை கட்டாயப்படுத்தல்.

கிராமோதய சபைகள், பிரதேச சபைகளின், அங்கத்துவத்தை நாற்பது வீதத்தால் அதிகரித்தல், அந்த வெற்றிடங்களை கட்சிச் சார்பற்ற தேர்தல் மூலம் நிரப்புதல்.

ஏப்ரல் மாதம் 3,4, 5, 7, 10 11, 12, 17, 18, 19, 20 ஆகிய திகதிகளில் இந்தக் கூட்டம் மீண்டும் நடைபெறவுள்ளன.

ஏப்ரல் மாதம் கூடும்போது பின்வரும் விடயங்கள் எடுத்துக் கொள்ளப்படும் நாட்டிலுள்ள அனைவாதும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல், தகவல் ஊடகங்களின் சுதந்திரம், அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் என்பனவே.

இந்த விடையங்களை ஆறு கட்சிகள் தமது அபிப்பிராயங்களை எழுத்து மூலம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரியில்

## 53 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணக் கல்லூரி க. பொ. த. உயர்தரப் பிரிவைச் சேர்ந்த ஐம்பத்துமூன்று மாணவர்கள் பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இக்கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் இரண்டு ''ஏ''யையும் ''பி''யையும் பெற்றுள்ளார்கள். ஒரு மாணவன் இரண்டு ''ஏ''யையும், ஒரு ''பி''யையும் ஒரு ''சீ''யையும், மூன்று மாணவர்கள் ஒரு ''ஏ''யையும் ஒரு ''பி''யையும் இரண்டு ''சி''யையும், மூன்று மாணவர்கள் ஒரு ''ஏ''யையும் மூன்று ''சி''யையும் பெற்றுள்ளார்கள்.

## ஒய்வூதியம் பெறுபவர்கள் தாமதமின்றி பெறச் சட்டம்

(கொழும்பு)

ஒரு அரசாங்கஊழியர் ஓய்வு பெற்றுப் குறிப்பிட்ட காலத்தினுள் அவரது ஆவணங்கள் ஒய்வூதிய திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க சம்மந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கம் புதிய சட்டமூலத்தை கொண்டுவரவுள்ளது.

பல ஊழியர்கள் ஒய்வூதியம் காரணமாக எமது அலுவல பதில் கூறப்படுகிறது என்றும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு கோவைகள் அனுப்பாத திணைக்களத் தலைவர்களுக்கு தண்டனை வழங்கவும் சட்டமூலத்தில் வழி செய்யப்படவுள்ளது.

## நெடுமாறன்

பாடசாலை.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் பெரும் சிரமப்படுகின்றனர்.

சில பாடசாலைகளில் இரவுக் காவலாளி இல்லை. சிலவற்றில் பகலில் சிற்றூழியர் இல்லை. இதில் பகல் வேலைகளை ஆசிரியர்களும், மாணவர்களும் மேற்கொள்கின்ற

யு என் பி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித் தலைவரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயகா நேற்று பாராளுமன்றம் கூடியதும் எழுப்பிய பிரச்சினையொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு......

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

ளாகி விட்டன மற்ற இயந்திரம் பழுதடைந்து சுமார் ஆறு மாதங்களாகி விட்டன இதனால் நடமாடும் எக்ஸ்றே இயந்திரம் மூலம் அவசர நோயாளர்களுக்கு மட்டும் எக்ஸ்றே எடுக்கப்படுகிறது.



சமீபத்தில் லொறி மோதி படுகாயமடைந்து சென்னை தேவகி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவைக் இந்தியாவின் முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறும் படம் இது. நன்றி ஜூனியர் விகடன்

## அடம்பன் மகா வித்தியாலயம் பரீட்சையில் நூறுவீத சித்தி

(அடம்பன்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ. உ. த. பரீட்சைக்கு அடம்பன் மகா வித்தியாலயத்தில் இருந்து தோற்றிய பத்துப் பேரும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இதில் எட்டுப்பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியுடையவர்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

பொருளியல் பாடத்தில் தோற்றிய பத்து மாணவர்களில் 7பேர் மிகத்திறமைச் சித்தியும், 2பேர் திறமைச்சித்தியும், ஒருவர் சாதாரண சித்தியும் பெற்றுள்ளனர். வர்த்தகத்தில் தோற்றிய பத்து பேரில் ஏழுபேர் திறமைச் சித்தியும், மூன்று பேர் சாதாரண சித்தியும் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த எட்டுவருட கால தொடரான வன்முறையால் பாதிக்கப்பட்ட அடம்பன் மகாவித்தியாலயம் இவ்வாறான ஓர் சிறந்த பரீட்சை முடிவைப் பெற்றுக் கொண்டமைக்கு ஆசிரியர்களினதும், மாணவர்களின் விடாமுயச்சியே காரணம் எனத் தெரிகின்றது.

பயிற்சி ஆசிரியர் . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மனத்தில் தாமதம் ஏற்பட்டதால் ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் இன்று வியாழக்கிழமை இந்த நியமனங்கள் வழங்கப்படும்.

கடந்த வாரம் திருகோணமலை மாவட்டத்தில் எழுநூற்றி ஐம்பதுபேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து இருபதாயிரம் விண்

பெங்களூர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரிகைகள் சில நேற்றுத் தெரிவித்தன.

1987ஆம் ஆண்டில் பங்களூரில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்த நந்திமலையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்கு அன்றைய தமிழக முதலமைச்சர் எம் ஜி ஆர். மூலம் முயற்சி மேற்கொள்ளப்பட்டதும் இதற்குத் திரு. பிரபாகரன் மறுப்புத் தெரிவித்து அங்கிருந்து வெளியேறியதும் தெரிந்ததே.

## மகளிர் சீருடைகள் மர்ம மறைவு.

(மானிப்பாய்)

மானிப்பாயிலுள்ள பெண்கள் பாடசாலையொன்றிலிருந்து பிள்ளைகளுக்கு வழங்கப்பட்ட சீருடைக்கான துணிகளில் இருபத்தேழுதுண்டுகள் காணாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

2 1/2 மீற்றர் உடைய இந்தத் தண்டுகளில் மூன்று துண்டுகளே அதிபரின் அலுவலகத்தில் காணப்பட்டதாம்.

இச்சம்பவம் குறித்து கல்வியதிகாரிகளுக்கும் புகார் செய்யப்பட்டுள்ளது.

## தபால் சேவையை சீராக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியெங்கும் விரைவில் தபால் சேவை ஒழுங்காக நடைபெற நடவடிக்கை எடுக்கப்படுவருவதாக யாழ். பிரதம தபால் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய அமைதி இதற்கு சாதகமாக அமைவதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

தற்போதய இரவு ரயில் சேவை, வடபகுதி தபால் சேவைகளை ஒழுங்காகக் கொண்டுவர வாய்ப்பளித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (தி)

ஈ. பி. ஆர்.எல்: எவ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சையாக ஈழம் பிரகடனம் செய்த பின் இப்படியான ஒரு சூழ்நிலைதான் ஏற்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எல். குழுவை

பிறுள்ளனர். இக்கல்லூரி யைச் சேர்ந்த இரண்டு மாண வர்கள் இரண்டு ''ஏ''யையும் ''பி''யையும் பெற்றுள்ளனர் மாணவர்கள் ஒரு ''ஏ''யை யும் மூன்று ''சி''யையும் பெற்றுள்ளார்கள்.

# ஓய்வூதியம் பெறுபவர்கள் தாமதமின்றி பெறச் சட்டம்

(கொழும்பு)

ஒரு அரசாங்கஊழியர் ஓய்வு பெற்றுக் குறிப்பிட்ட காலத் தினுள் அவரது ஆவணங்கள் ஓய்வூதிய திணைக்களத்துக்கு அனுப்பிவைக்க சம்மந்தப் பட்ட திணைக்களம் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கம் புதிய சட்டமூ லத்தை கொண்டுவரவுள்ளது.

பல ஊழியர்கள் ஓய்வூதியம் காரணமாக எமது அலுவல கங்களுக்கும், ஓய்வூதியதிணை க்களத்துக்கும் அலைந்துதிரிவ தாகவும் பிரதமரின் கவனத் துக்கு கொண்டுவரப்பட்டுள் ளது.

இவர்கள் பிற மாவட்டங்க ளில் இருந்து கொழும்பிலுள்ள ஓய்வூதிய திணைக்களத்துக்கு சென்றால் அங்கேகோவைகள் வரவில்லை என்ற பதில் கூறப் படுகிறது. நாம் பணிபுரிந்த அலுவலகம் சென்றால் யாவும் அனுப்பப்பட்டுள்ளது என்று பதில் கூறப்படுகிறது என்றும் இங்கு சுட்டிக் காட்டப்பட் டுள்ளது.

இவ்வாறு கோவைகள் அனு ப்பாத திணைக்களத் தலை வர்களுக்கு தண்டனை வழங் கவும் சட்டமூலத்தில் வழி செய்யப்படவுள்ளது.

## நெடுமாறன் சமயப்பெரியார் சந்திப்பு

(மட்டக்களப்பு)

தமிழ்நாடு அரசியல் பிரமுகர் திரு. பி. நெடுமாறன் மட்டக் களப்பு - திருமலை ஆயர் அதி வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை இராமகிருஷ்ண மிஷன் முதல் வர் சுவாமி ஜீவானந்தாஜீ உட்பட சமூக, சமய, அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேசி னார்.

# ஆங்கில ஆசிரியர்கள் விரைவில் நாடுமுழுவதும் நியமனம்

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலை களில் விரைவில் ஆங்கில ஆசி ரியர்கள் நியமிக்கப்படவுள் ளன.

ஆங்கிலத்தை கட்டாயபாட மாக கல்வி அமைச்சு கொண் டுவந்திருப்பதால் இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

தேவையேற்படில் ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்க ளும் சேவையிலீடுபடுத்தப்பட வுள்ளனர்.

க. பொ. த. உயர்தர பரீட் சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரி மை வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

# நாட்டிலுள்ளபாடசாலைகள் மூன்று வகையாக பிரியும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைக ளை மூன்று வகையாகப் பிரிக்க கல்வியமைச்சு தீர்மா னித்துள்ளது.

ஆரம்ப பாடசாலை, கனிஷ் ட இரண்டாம் நிலை பாட சாலை, சிரேஷ்ட இரண்டாம் நிலை பாடசாலை என்ற வகையில் பிரிக்கப்படும்.

சகல உதவி அரசாங்க அதி பர் பிரிவுகளிலும் தலா ஒரு கனிஷ்ட இரண்டாம் நிலை பாடசாலை நிறுவப் படும்.

இதே போல சகல உதவி அரசாங்க அதிபர் [illegible] வுகளிலும் ஒரு கனி[illegible] இரண்டாம் நிலை பாடசா லையை உயர்தர பாடசாலை நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

சகல பாடசாலைகளிலும் மூன்றாம் ஆண்டுக்கு மேல் கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில மொழி கட்டாய பாடமாக்கப்படும்.

குழுவுக்கு அதிக அதிகாரங் களை வழங்குதல், பாராளு மன்ற துணைக் குழுக்களை அதிகஅளவில்பயன்படுத்துத்ல்

எல்லாக் கட்சிகளினதும் எம்.பிக்கள்மாவட்டபொதுக் கூட்டங்களில் பங்குபற்றுதல் ஒவ்வொரு எம். பி. க்களுக் கும் சட்டத்துறை உதவியா ளர் இருவரை நியமித்தல், 18-30 க்கும் இடையிலுள்ள

காப்பினை உறுதிப்படுத்தல், தகவல் ஊடகங்களின் சுதந் திரம், அடிப்படை உரிமை களைப் பாதுகாத்தல் என்ப னவே.

இந்த விடையங்களை ஆறு கட்சிகள் தமது அபிப்பிராயங் களை எழுத்து மூலம் தெரி வித்துள்ளது.

### பாடசாலை.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளும் பெரும் சிரமப்படுகின்ற னர்.

சில பாடசாலைகளில் இர வுக் காவலாளி இல்லை. சில வற்றில் பகலில் சிற்றூழியர் இல்லை. இதில் பகல் வேலை களை ஆசிரியர்களும், மாண வர்களும் மேற்கொள்கின்ற னர்.

இவற்றிற்கு தற்காலிகஊழி யர்களை எங்கிலும் நியமித் தால் பெரும் உதவியாகும்என பாடசாலை அபிவிருத்திச் சங் கங்கள் தெரிவிக்கின்றன.

### போனவர்--------

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசி இணைப்புகளுக்கு ரூபா 1 இலட்சத்து 24 ஆயிரம் ரூபா

ஈ. பி. ஆர். எல். எப் - முன் னாள் பா. உ ஒருவரின் தொலைபேசி (ரூபா 9,000) உட்பட 7 இணைப்புகளுக்கு 2 இலட்சத்து 4 ஆயிரம் ரூபா

ஈ. என். டி. எல். எப் - 2 தொலைபேசி இணைப்புக ளுக்கு 66,000 ரூபா

மேற்படி இணைப்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பாக தொலைத்தொடர்பு பணிப் பாளருக்கு அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது என்றார் (37)

### மாக் களஞ்சியம்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடத்தை விட்டு இந்தியப் படையினர், விலகிச் சென் றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

அக் களஞ்சியத்தில் படை யி[illegible] தங்கியிருந்த காரணத் [illegible]ால் அடிக்சடி மா ஏற் [illegible]வில் இடையூறு இருந்து [illegible] குறிப்பிட த்தக்கது. (தி)

### லிகிதர்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

வேண்டிய தமது இந்த வேலை களை இலகுவாக்க ஆசிரியர் களை பயன்படுத்துகிறார் என புகார் தெரிவிக்கப்படுகி றது.

அதே போல் சம்பள பட்டி யல் வேலைகளிலும் 80 சத வீதமான வேலைகள் அதிபர் களால் நிரப்பப்படுகின்றன.

### யு என் பி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித் தலைவரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவரு மான திருமதி சிறிமா பண் டாரநாயகா நேற்று பாராளு மன்றம் கூடியதும் எழுப்பிய பிரச்சினையொன்றுக்குப் பதி லளிக்கையிலேயே அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா மேற் கண்டவாறு கூறினார்.

## இந்திய இராணுவம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் உள்ளோம் என கோண் டாவில் டிப்போ தலைவல அதிகாரி தெரிவித்துள்ளார்,

மேலும் அவ்வதிகாரி கருத்து தெரிவிக்கையில்எமக்கு உட னடியாக நூறு பேரூந்துகள் தேவையாக உள்ளது இது பற்றி அரசுக்கு அறிவித்து மூன்று மாதங்கள் ஆகிறது. ஆனால் எதுவித அறிவித்த லும் இதுவரை கிடைக்க வில்லை.

எமது டிப்போவுக்கு இரட் டைத் தட்டு பஸ்கள் வரு கிறது என்று உள்ளூர் பத்தி ரிகைகளில் கூறப்பட்டவை அனைத்தும் வெறும் செய் தியே ஆனால் இதுபற்றியும் எமக்கு இன்றுவரை எதுவுமே தெரியாது.

வடபிராந்தியத்தில் உள்ள ஏழு டிப்போக்களிலும் மொத் தமாக எமக்கு இருநூற்று அறுபது பேரூந்துகள் தேவை. ஆனால் இப்போது நூற்று அறுபது பேரூந்துகளே சேவை யில் உள்ளன. அது மட்டு மல்லாது இவற்றில் பல உதி ரிப் பாகங்கள் அற்ற நிலை யில் உறங்கிக்கொண்டிருக்கின் றன. தற்போது எம்மிடம் இருக்கும் பேரூந்துகளும் உதி ரிப் பாகங்கள் இல்லாமையால் ஒவ்வொன்றாக நிறுத்த வேண் டிய நிலைக்கு உட்பட்டுள்ள தும் குறிப்பிடப்பட வேண்டும் என்றார்

மேலும் அவ்வதிகாரி கருத் துத் தெரிவிக்கையில் நடந்த காலங்களில் எமது வடபிராந் திய போக்குவரத்துச் சபையில் எந்தஅரசும் கவனம் செலுத்த வில்லை. சுமூகமான நிலை தற்போது தோன்றி உள்ள தால் விரைவில் எமது பிரச் சினை தீர்க்கப்பட வழிவகை கள் ஏற்படும் என நம்புவ தாகவும் அதுவரை பொது மக்கள் எம்முடன் ஒத் துழைக்க வேண்டும் என்றும் அவர் வேண்டிக் கொண்டார்.

த்தில் தோற்றிய பத்து பேரில் ஏழுபேர் திறமைச் சித்தியும், மூன்று பேர் சாதாரண சித்தி

### பயிற்சி ஆசிரியர்..

(1ஆம் பக்க தொடர்ச்சி)

மனத்தில் தாமதம் ஏற்பட்ட தால் ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை வழங்கியுள் ளார்.

கிளிநொச்சி, மன்னார், வவு னியா, முல்லைத்தீவு, மட்டக் களப்பு, கல்முனை ஆகிய பகுதிகளில் இன்று வியாழக் கிழமை இந்த நியமனங்கள் வழங்கப்படும்.

கடந்த வாரம் திருகோண மலை மாவட்டத்தில் எழு நூற்றி ஐம்பதுபேருக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட் டன.

யாழ்ப்பாண மாவட்டத்தி லிருந்து இருபதாயிரம் விண் ணப்பங்கள் கிடைத்துள்ளதா கவும் திரு. மெண்டிஸ் தெரி வித்தார்.

### ாகாணசபை...

(1 ஆம் பக்சத் தொடர்ச்சி)

பட்ட காலம் முதல் கட்ட ணம் செலுத்தப்படவில்லை. இதனால் சுமார் 6 இலட்சத்து 34 ஆயிரம் ரூபா நிலுறை யாக உள்ளது. அம்பாவை மாவட்டத்தில் 15 உறுப்பினர் சளும் சுமார் 3 இலட்சத்து 15 ஆயிரத்து 500 ரூபா செலு த்த வேண்டியுள்ளது.

இவர்களில் ஸ்ரீ ல. மு. கா. 10 பேர், 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், ஈ பி ஆர். எல். எவ் உறுப்பினர் 4 பேர் சுமார் 53 ஆயிரம் ரூபாவும் ஐ. தே. க. உறுப்பினரொரு வர் சுமார் 16 ஆயிரம் ரூபா வும் செலுத்த வேண்டும்.

ஸ்ரீல. மு. கா. உறுப்பினர் இருவர் முறையே 59 ஆயிர த்து 836 ரூபாவும், 39 ஆயி ரத்து 313 ரூபாவும் தொலை பேசி கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத் தில் 10 உறுப்பினர்கள் சுமார் 2 1/2 இலட்சத்து 87 ஆயிரம் ரூபா தொலைபேசிக் கட்ட ணம் செலுத்தவேண்டியுள் ளது.

ஸ்ரீ ல. மு. கா. 3 பேர் சுமார் 37 ஆயிரமும், ஈ. பி. ஆர். எல். எவ். 7 பேர் சுமார் 2 1/2 இலட்சம் ரூபா செலு த்த வேண்டும்.

ஈ. பி. ஆர்.எல். எப். உறுப் பினர் ஒருவர் 67 ஆயிரத்து 475 ரூபா 75 சதம், மற்று மொருவர் 69 ஆயிரத்து 658 ரூபா 05 சதம் என கூடுத லாக தொலைபேசி உபயோ கித்துள்ளார்கள்.

அதே நேரம் மேற்படி இணைப்புகள் வழங்கப்பட்ட செலவு சுமார் 4 இலட்சம் ரூபா வட-கிழக்கு மாகாண சபை இதுவரை தமக்கு வழ ங்கவில்லையென்றும் அவர் தெரிவித்தார் (37)

ரிகைகள் சில நேற்றுத் தெரி வித்தன.

1987ஆம் ஆண்டில் பங்க ளூரில் நடந்த சார்க் மாநாட் டில் கலந்து கொண்ட அப் போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இந்த நந்திமலையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகர னைச் சந்தித்துப் பேசுவதற்கு அன்றைய தமிழக முதலமைச் சர் எம் ஜி ஆர். மூலம் முய ற்சி மேற்கொள்ளப்பட்டதும் இதற்குத் திரு. பிரபாகரன் மறுப்புத் தெரிவித்து அங்கி ருந்து வெளியேறியதும் தெரி ந்ததே.

## நாபா - பெருமாள் கருத்து வேறுபாடு

வடக்கு கிழக்கு மாகாண சபை நிர்வாகம் சம்பந்தமாக வும் கடைசி நேரத்தில் நிகழ் ந்த சம்பவங்கள் தொடர் பாகவும் பெருமாளுக்கும் நாபாக்குமிடையில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதாக வும் இதன் விளைவாகவே நாபானவ ஒரிஸா மாநிலத் துக்குள் விமானத்தில் இந்திய இராணுவம் அனுப்பியதாக வும் வரதராஜப்பெருமாளை பவித்திரமாகப் பங்களூருக் குக் கொண்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

## ஆதி வர்சிகள் முறுகல்

ஒரிஸாவில் ஏற்கனவே பத் தாயிரம் திபெத்திய அகதிக ளும் ஏழாயிரம் பங்ளா தேச அகதிகளும் இருக்கும் போது மேலும் இலங்கையி லிருந்து தமிழர்களை அகதி களாக்கிக் கொண்டுவந்து சேர்த்திருப்பதை எதிர்த்து ஒரியா மாநில ஆதிவாசிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து மகஜர் ஒன்றை மாநில முத லமைச்சரிடமும் ஆளுநரிட மும் கையளித்துள்ளனர்,

இதேசமயம் தமிழ் நாட்டி லிருந்து பொலீஸ் அணி யொன்று ஒரிஸாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழ் அகதிகளின் நடவடிக்கையைக் கண்கா ணிம்பதற்காக அனுப்பிவைக் கப்பட்டுள்ளது.

இங்கு அகதிகளாகத் தங்கி பிருக்கும் குழுக்களைச் சேர்ந் தவர்கள் தமிழ் நாட்டுக்குத் தப்பி வந்திடாமல் தடுப்ப தற்கும் அங்குள்ள ஆதிவாசி கள் இவர்களைத் தாக்காமல் தடுத்தும் பாதுகாப்பதற்காக வு ம தமிழ்நாட்டுப் பொலீஸ் பிரிவு அங்கு அனுப்பப்பட் டுள்ளதாகவும் கூறப்படு கிறது.

வில் தபால் சேவை ஒழுங் காக நடைபெற நடவடிக்கை எடுக்கப்படுவருவதாக யாழ். பிரதம தபால் நிலைய அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய அமைதி இதற்கு சாதகமாக அமைவ வதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

தற்போதய இரவு ரயில் சேவை, வடபகுதி தபால் சேவைகளை ஒழுங்காகக் கொண்டுவர வாய்ப்பளித் திருப்பதாகவும் அவர் குறிப் பிட்டார். (தி)

### ஈ. பி. ஆர்.எல்: எவ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சையாக ஈழம் பிரகடனம் செய்த பின் இப்படியான ஒரு சூழ்நிலைதான் ஏற்பட்டுள் ளது.

ஈ. பி. ஆர். எல். எல். குழுவை ஸ்ரீலங்காவின் அரசியலில் தலையிடும்படி இந்திய அரசி யல் வாதிகள் கேட்கலாம். இது தான் உண்மையும் கூட என்றார். பெருமாள் நாட்டை விட்டு மாறியது தனக்கு அதிர்ச்சியைத் தரும் செய்தி அல்லவென்றும், இந்திய இரா ணுவம் வெளியேறும் கால எல்லையுடன், ஈ பி. ஆர். எல். எவ்வும் வெளியேறிவிடும் என்பது தனக்கு ஏலவே தெரிந்த விஷயம் என்று பால குமார் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் மக்களு டைய பிரசிசனைகளைத் தீர்ப் பதற்கான உண்மையான ஒரு சந்தர்ப்பம் தற்போது இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகள் என்றார்.

வழமையாக மாறி மாறிப் பதவிக்குவரும் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியும், ஐக்கிய தேசி யக் கட்சியும் பொதுவாக ஒன்றை ஒன்று எதிர்த்தே செயற்பட்டு வந்துள்ளன. இப் பொழுது தாம் அரசாங்கத்து டன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டுள்ளோம். அர சாங்கம் எஸ் எல். எவ். பி யுடன் இது பற்றித் தொடர்பு கொள்ளுமென நாம் நம்புகி றோம். டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கை, பண்டாரநா யக்கா - செல்வநாயகம் உடன் படிக்கை இவைஇரண்டும் எஸ் எல். எவ். பி அரசாங்கத்தினா லும், யு. என். பி அரசாங்கத் தினாலும் அமுல் படுத்தப்பட வில்லை. தமிழர்களுடன் நடந்துவரும் பேச்சுவார்த்தை களில் இரு கட்சிகளும் இணை ந்து செயற்பட முன்வர வேண் டும். புதிதான இந்த அரசியல் அரங்கில் நாட்டின் நன்மைக் காக நாம் எல்லோரும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டும் இரு தரப்புகளும் நம்பிக்கை இல்லாமல் பிரச்சினையை நீடித்துக் கொண்டு போனால் இலங்கையில் இறுதியாக ஒரு இரத்தக்களரி ஏற்படவேண்டி ஏற்படும். இவ்வாறு பாலகு மார் சுட்டிக் காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக் கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.